Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -31 | 16-08-2003 | சனிக்கிழமை | ஓசை 179


R.A.Nelsan Yasarathne
T.P: 024-23318
NELSON LEARNERS
(Government Approved "A" Grade Driving School)
Reg No :D.S.242
சிறிய வாகனம் முதல் பெரிய வாகனம் வரை பயிற்சிகொடுத்து லைசன்ஸ் கொடுக்கப்படும்.
கிளை: வவுனியா, யாழ்ப்பாணம். (..-8246)
No:86, Bus Stand Complex Vavuniya.

# விடுதலைப் புலிகளின்றி கடற்படையினருடன் இனிப் பேச்சுக்களில் ஈடுபடப் போவதில்லை!

## வலி.மேற்கு கடற்றொழிலாளர் கூ.ச.முடிவு

**எமது ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளையும் ஒரு தரப்பினராக ஏற்றுக் கொள்ளாது கண்காணிப்புக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்படும், கடற்படையினருக்கும், கடற்றொழிலாளர்களுக்கும் இடையேயான எந்தவொரு சந்திப்புக்களையும் இனி நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என வலிகாமம் மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் க.குலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

கடந்த செவ்வாயன்று சுளிபுரம் பகுதியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் கடற்றொழிலாளர்களுக்கும், கடற்படையினருக்கும் இடையேயான சந்திப்பின் போது கடற்படையினரால் உறுதிப்படுத்தப்பட்ட தீர்மானங்கள் இப்பொழுதும் நடைமுறையிலுள்ளதா என்ற செய்தியாளர்களின் கேள்விகளுக்கு விடை கூறும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக எமது மீனவர்கள் மீது படையினர் கட்டவிழ்த்துவிடும் அடாவடித்தனங்கள் தொடர்பாகவும், வன்செயல்கள் தொடர்பாகவும் எமது கடற்றொழிலாளிகள் எதிர்நோக்கும் துன்பங்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தாய்.தூதுவர் — தமிழ்ச்செல்வன் இன்று சந்தித்துப்பேச்சு

சிறிலங்காவுக்கான தாய்லாந்து தூதுவர் தலைமையிலான குழுவொன்று இன்று காலை கிளிநொச்சிக்கு வருகைதந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளது.

இக்குழு கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ளது. காலை 11மணியளவில் சந்திப்பு இடம்பெறும்.

## இந்தியவெளிவிவகார அமைச்சரின் இல. வருகையில் தாமதம்

இந்திய வெளியுறவு அமைச்சரின் இலங்கைக்கான விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.என்றுசிறிலங்கா வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கா அடுத்ததிங்கட்கிழமை இங்கு வரவிருந்தார்.

கொழும்பில் இந்திய இலங்கைக் கூட்டு ஆணைக்குழுவின் மாநாட்டில் சிறிலங்கா வெளியுறவு அமைச்சருடன், இந்திய வெளியுறவு அமைச்சரும் கலந்து கொள்ளவிருந்தார் பாராளுமன்றத்தில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் இம்மாதம் 19ஆம்20ஆம் திகதிகளில் இடம் பெறவிருப்பதால் இலங்கைக்கான இந்திய விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாகசிறிலங்காவுக்கான இந்திய உயர்ஸ்தானிகர் நிருபன் சிங்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

மேஜர் கருவேலன் (வேலு அருள்ராஜ் அப்புத்தளை இரத்தினபுரி த. மு. மடுமாதா சுண்ணாம்பு வாணிப வீதி 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சிறிலங்கா மீதான அழுத்தத்திற்கு நோர்வே உந்து சக்தியளிக்க வேண்டும்!

### -யாழ். அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள்

வடபகுதி மக்களின் வாழ்வுரிமையைப் பேணுவதன் ஊடாக அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் சிறிலங்கா அரசு மீது சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு நோர்வே அரசாங்கம் உந்து சக்தியாகச் செயற்பட வேண்டுமென யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவன ஒன்றியப் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த நோர்வேயைச் சேர்ந்த கரித்தாஸ் அமைப்பின் மனித உரிமைகள் பேணும் அதிகாரி ஜில் பேணாட் நேற்று அரச செயலகத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## குறிப்பிட்ட பகுதியில் மட்டும் படகை நிறுத்த நிர்ப்பந்தம்

தம்மால் குறிப்பிடப்பட்ட சிறு பகுதிகளிலேயே மீன்பிடிப் படகுகளை நிறுத்தி வைக்க வேண்டும் என படைத்தரப்பு தொடர்ந்தும் நிர்ப்பந்தித்து வருவதால் தமது படகுகள் போதிய இடவசதி இன்றி நாள் தோறும் சேதமடைந்து வருவதாக அப்பகுதி மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நேற்றையதினம் வடமராட்சி சுப்பர்மடம் பகுதிக்கு விஜயம் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி அப்பகுதி மீனவர்களைச் சந்தித்து உரையாடினார்.

அண்மைக் காலமாக மீனவர்கள்மீதான நெருக்கடிகள் தொடர்பாக செய்திகள் வெளியாகி வருகின்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

## -பயிர்செய்கை மேற்கொள்ள-
## புதிய இராணுவ அடையாள அட்டை பெறப் படையினர் வற்புறுத்து

சுமார் மூன்று வருட இடைவெளியின் பின்னர் நெற்பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தென்மராட்சிப் பகுதியின் வயல் பகுதிக்குச் செல்வோர் இராணுவ அடையாள அட்டைகளைப் புதிதாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிகளில் தென்மராட்சி தெற்கு, மறவன்புலவு, தனங்களப்பு, கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களை அடுத்துச் சுமார் 5000 ஏக்கருக்கு அதிகமான வயல்நிலம் உயர் பாதுகாப்பு வலயம் என்று நெற்பயிர்ச்செய்கைக்குஅனுமதி மறுக்கப்பட்டிருந்ததுஎனினும் அப்பகுதியைச்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்களை தாய்லாந்தில் நடத்தியது குறித்துபெருமையடைகிறோம்

### தாய்லாந்துப் பிரதமர் சிறிலங்கா பாராளுமன்றத்தில் உரை

இலங்கையின் சமாதான பேச்சுக்களைஎமதுநாட்டில் நடத்துமுடிந்தமையை எண்ணி தாய்லாந்து பெருமை கொள்கிறது என சிறிலங்காவுக்கு விஜயம் செய்துள்ள தாய்லாந்துப்பிரதமர் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்துப் பிரதமர் தக்சின்சினவத்ரா நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றியுள்ளார்.

சிறிலங்காவுக்கு விஜயம் செய்த வெளிநாடுஒன்றின் அரசாங்கத் தலைவர் ஒருவர் பாராளுமன்றத்தில் 18வருட கால இடைவெளிக்குப் பின்னர் ஆற்றியமுதலாவது உரையாக இது அமைந்துள்ளது. அவர் தனது உரையில் கூறுகையில்;

இரண்டுவருட காலத்தில் தாய்லாந்து எட்டு லட்ச டொலர்களை தொழில்நுட்ப உதவியாக



வழங்குமெனக் கூறியுள்ளார். கடந்த காலத்தில் இரண்டுநாடுகளும் ஒவ்வொரு நாட்டின் வரலாற்றில் ஆற்றிய கணிசமான பங்களிப்பு பற்றி அவர் கூறினார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்துப் பிரதமரிடம் பொ.ஐ.முன்னணி மகஜர்

சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பான மனு ஒன்றினைப் பொதுசன ஐக்கிய முன்னணி தாய்லாந்துப் பிரதமரிடம் கையளித்துள்ளது.

நாட்டில் அரசாங்கம் தொடர்ந்தும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த மனுவைத் தாய்லாந்துப் பிரதமரிடம் நேரடியாகக் கையளிக்க முடியாமையால் தூதுவர் மூலம் கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் அமைதி ஏற்பட இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்

### இந்தியத் தூதுவர் நிரூபம் சிங்

இலங்கையில் அமைதி, சுபீட்சம் ஏற்படுவதற்கு இந்தியா பூரண ஒத்துழைப்பை வழங்குமென இந்தியத் தூதுவர் நிரூபம் சிங் தெரிவித்திருக்கின்றார். இந்தியாவின் உதவிகள் வடக்குக் கிழக்கிற்கு மாத்திரமன்றித் தென்பகுதிக்கும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சுதந்திரதினம் நேற்று இந்தியாவின் இலங்கைத் தூதரகம் முன்பு கொண்டாடப்பட்டது. அதன் போது தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றும் போதே, இந்தியத் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## யாழ்.சிறை உப அத்தியட்சகர் காரணமின்றித் தாக்கினார்!

### ம.உ.ஆணைக்குழுவிடம் இருவர் முறையீடு

யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்குப் பொறுப்பான உப உத்தியோகத்தர் ஒருவர் காரணமின்றித் தம்மை மிகவும் கொடூரமாகச் சித்திரவதை செய்துள்ளதாக, விடுதலை பெற்ற இருகைதிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறைச்சாலையின் உப அத்தியட்சகர் சிவபாலசுந்தரத்துக்கு எதிராகக் கடந்த 14 ஆம் திகதியன்று விடுதலைபெற்ற கைதிகளான கோயில் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரனி ஜெயக்குமார் மற்றும் மடம் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லக்ஸ்மணன் ஆகியோரால் செய்யப்பட்ட இம் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த மூன்று மாத காலமாகச் சிறு குற்றம் ஒன்றுக்காகச் சிறைவாசம் அனுபவித்த தாம் காரணம் எதுவுமின்றிக் கட்டித் தூக்கப்பட்டுக் குண்டாந் தடிகளால் தாக்கப்பட்டதாகவும், தூர்வார்த்தைகள் கொண்டு பேசி இழிவுபடுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் யாழ்...

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

பேரின்பநாதன் சுதன் என்பவரது தேசிய அடையாளஅட்டை 10-08-2003 அன்று இரவு முறிப்புக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து இதை கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (3644)

### உயர் கல்விநிலையம்

(டிப்போ வீதி கிளிநொச்சி)
A/L DAY 2004 ஆகியவற்றிற்கான துரித மீட்டலும், வினாவிடையும் ஆரம்பம்16-08-2003 பி.ப 4.00 மணி. தமிழ்: S.S. மோகன், கணக்கீடு: S. நிசா (ஏனைய பாடங்கள் இவ்வாண்டு முன்னணிப் பெறு பேற்றுக்கு வழிவகுத்த உங்கள் ஆசிரியர்கள்) நிர்வாகி (3641)

# உலக வங்கி உயரதிகாரிகள் கிளிநொச்சிக்கு விஜயம்

## - நியாப் திட்டங்களைப் பார்வையிட்டனர்

(அலுவலக செய்தியாளர்)
உலகவங்கியின் உயர் அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு நியாப்நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

உலகவங்கியின் உயர் அதிகாரி நிகால் பெர்னாண்டோ உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி கிளிநொச்சிமாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் நேற்றுமுன்தினம்பகல் 10.00மணிக்கு உருத்திரபுரம் சிவநகரில் நியாப் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டகுள வேலைத்திட்டத்தினை பார்வையிட்டனர்.

அதனையடுத்து மேற்படி பகுதிகளில் நியாப்திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட மூன்று கிணறுகளை பார்வையிட்டதுடன் மேற்படி திட்டத்தில் அமைக்கப்பட்டபுதிய பொதுமண்டபத்தினை திறந்து வைத்தனர். அடுத்து நியாப்திட்டத்தின் பிரகாரம் தற்போது சிவநகர் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும்ஜீவனோபாயத்திட்டம் தொடர்பாக சிவநகர் கிராம மகளிர் சங்க பிரதிநிதிகள் மற்றும் பயனாளிகளுடன் கலந்துரையாடினர்.

அடுத்து உலக வங்கிபிரதிநிதி கருத்துத்தெரிவிக்கையில்;
நியாப்திட்டத்தின் மூலம் இக்கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பயன் பெற்றுள்ளமையினை கண்டுபெருமகிழ்ச்சியடைகின்றேன். இச்செயற்பாட்டினை உலக வங்கிக்கு தெரியப்படுத்தவுள்ளேன் எனத் தெரிவித்தார். (சோ)

# இலங்கை மத்திய வங்கி வட்டி வீதங்களை குறைத்தது

இலங்கை மத்திய வங்கி வட்டி வீதங்களைக் குறைத்துள்ளது அது மீள் கொள்வனவு மீள்விற்பனை வீதங்களை 0.75வீதமாக இதன் பிரகாரம் வர்த்தக வங்கிகளும் அவற்றின் வட்டிவீதங்களைக் குறைக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பண வீக்கத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கையால் வட்டி வீதம் குறையும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வரவு செலவுத் திட்ட முகாமைத்துவத்திலும் சீரான நடவடிக்கை எடுக்க வழி ஏற்பட்டுள்ளது.

அண்மையில் வட்டி வீதங்கள் அதிகரித்தமைக்கு வங்கிகளின் நிதிவழங்கலை அரசாங்கம் கூடுதலாக உபயோகித்தமையே காரணமாகும். 1998 மற்றும் 2001ஆம் ஆண்டுகளில் அரசாங்கம் வங்கிகளிடமிருந்து 48 பில்லியன் ரூபா வைக்கடனாகப் பெற்றிருந்தது என மேலும் அவர் கூறினார்.

# துணுக்காய் கல்வி வலயத்தில் சிறந்த பெறுபேறு பெற்றோர்

(அலுவலக செய்தியாளர்)
துணுக்காய் கல்வி வலயத்தில் யோகபுரம் மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகியவற்றின் க.பொ.த உயர்தரப் பரீட்சை சிறந்த பெறுபேறுகள் வருமாறு,

**யோகபுரம்.ம.வி.**
கலைப் பிரிவு:-
விஜிதா, விஜயபாலா 2 ஏ,சி
கலைவாணி,ராஜரட்ணம், ஏ.2பி

மல்லாவி மத்தியகல்லூரி
கணிதப் பிரிவு:-
பா.தீபரூபன் ஏ,பி,சி
கு.கௌசிகன் 2பி,சி
கு.உ ,ாநந்தினி பி,2சி
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு:-
யோ.உமா ஏ,2சி
பா.வாசகன் பி,2சி
ஞா.ஜெயமயூரன் பி, 2சி
வணிகப் பிரிவு:-
ச.புஷ்பலலிதா, 2ஏ,பி
ஞா.சுதர்சினி, 2ஏ,பி
து.பாபுராஜ் ஏ,2பி
சு.பிரசாந்தி ஏ,2பி
சே.வினைக்ஸ் கியூபன் ஏ,2பி
கலைப் பிரிவு:-
தி.தர்சினி 2ஏ, பி.
இ.நவஜீவா ஏ,2பி
நா.சுஜீவன் ஏ.2பி
ஜெ.கபிலன் 3பி (பா)

# இத்தாலிக்குச் செல்ல முயன்ற 21பேர் திருகோணமலையில் பொலிசாரால் கைது

இத்தாலிக்கு மீன்பிடிக் கப்பல் மூலம் சட்டவிரோதமாக செல்லவிருந்த 21பேர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். திருகோணமலை மடிகோ இறங்கு துறையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக திருகோணமலைத் தலைமைப் பொலிஸ் இனஸ்பெக்டர் நிசங்க தசநாயக்க தெரிவிக்கின்றார் இவர்கள் அனைவரும் வத்தளை நீர்கொழும்பு, வென்னப்புவ பகுதிகளைச் சேர்ந்த இலங்கை வாசிகளாவர் மீன்பிடிக்கப்பலின் சொந்தக்காரர் தப்பிச் சென்றுவிட்டார்.

அண்மைக்காலத்தில் பல நூற்றுக்கணக்கான வெளி நாட்டவர்களும் இலங்கையர்களும் சட்டவிரோதமாக இத்தாலிசெல்ல முயன்று கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

# இத்தாலி செல்ல முயன்ற பாகிஸ்தானியர் 254 பேருக்கு ஒருவருடச் சிறை

இத்தாலி செல்ல முயன்றபோது தென்னிலங்கை கடற்பரப்பில் கைதான 254 பாகிஸ்தானியர்களுக்கு தங்காலை நீதிமன்றம் ஒருவருடகடுழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்தமாத நடுப்பகுதியில் கப்பல் மூலம் சட்டவிரோதமாக இத்தாலி செல்வதற்கு இரண்டு இழுவைப்படகுகளில் சென்று கொண்டிருந்தபோது சிறிலங்கா கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நீதிமன்ற உத்தரவின்பேரில் மீரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களில் 254பாகிஸ்தானியர்கள் கடந்த புதன்கிழமை நீதிமன்றின் முன்னிறுத்தப்பட்டபோது இவர்களுக்கு ஒருவருட கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

முதலில் இவர்கள் அனைவரையும் நாடு கடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதும் பின்னர் இவர்களை நீதிமன்றில் நிறுத்த தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை 500க்குமேற்பட்டோர் வெளிநாடு செல்ல முயல்கையில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# தனிமனித சுகாதாரம் குறித்து திருமுறிகண்டியில் கருத்தரங்கு

தனிமனிதன் தனது உடல் சுற்றம் சூழல் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் நோயற்ற நல்வாழ்வுக்கு வழி வகுக்க முடியும் என்று நேற்று திரு முறிகண்டி இந்துவித்தியாலயத்தில் நடைபெற்ற திருமுறிகண்டி வர்த்தக உரிமையாளர்கள் பணியாட்கள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஒட்டுசுட்டான் பிரதேசப் பொதுச் சுகாதார அத்தியட்சகர் தியாகலிங்கம் விரிவான விளக்கம் அளித்தார்.

இரண்டரை மணி நேரம் தொடர்ந்துரையாற்றிய தியாகலிங்கம் தொற்று நோய்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சகல வழிமுறைகளையும் விரிவாக, தெளிவாக எடுத்துக் கூறினார். (09)

# மக்கள் வங்கி கிளிநொச்சி புதிய கட்டடதிறப்பு விழா

கச்சேரி முன்பாக கண்டிவீதி கிளிநொச்சியில் இயங்கி வந்த எமது வங்கி எதிர்வரும் 18.08.2003 திங்கட்கிழமை காலை 9.30 தொடக்கம் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் அருகாமையில் உள்ள எம்.எம்.பி கட்டடத்திற்கு மாறிச்சென்று மக்கள் சேவையை ஆற்ற உள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம். இங்கு புதிதாக தொலை நகல் சேவை (பக்ஸ் வசதி) போன்ற புதிய சேவைகளையும் வங்கிவழங்க உள்ளதென்பதையும் அறியத்தருகின்றோம்.

(சி-8255)

# அறிவித்தல்

துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட சகல இந்து ஆலயங்களிலும் உற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்து இசைக்குழு, ஒலிபெருக்கி என்பவற்றைக் கொண்டுவரின் அரசியல் துறையின் அனுமதி பெற்ற பின்னரே கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அரசியல்துறை
துணுக்காய் பிரதேசம்

(சி-8253)

# சமுகம் தூரக்கோரல்

(அலுவலக செய்தியாளர்)
கிளிநொச்சி கல்விவலயத்தைச்சேர்ந்த அனைத்துப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை காலை 10.மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழக புகுமுக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடகிழக்கு மாகாண பகுதிநேர ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் கிளி. கல்வி வலயத்தைச் சேர்ந்தசகல பகுதிநேரஆங்கில ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளும்வண்ணம் மேற்படி சங்க செயலர் த.மனோகரன் வேண்டியுள்ளார். (சோ)

# விசேட குழு

பொதுமக்களால் பொலிசாருக்கு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளைக் கவனிப்பதற்கு ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட விசேட குழுவைப் பொலிஸ் ஆணையாளர் நாளை நியமிக்க உள்ளார். இந்தக் குழு அங்கத்தவர்கள் பிரதேச ரீதியாகத் தமது கடமைகளை முதன் முதலாக ஆரம்பிப்பார்கள் எனவும் ஆணையாளர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

# முக்கிய அறிவித்தல்

பூநகரி, பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சில இடங்களில் சட்ட விரோதமாக மணல், கல் அகழ்வு நடவடிக்கைகள் அதிகரித்து வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் எமது பிரிவு சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் நிலை காணப்படுகின்றது. இத்தகைய பேரழிவைத் தடுப்பதற்காக கீழ்க்காணும் இடங்களில் மாத்திரம் உரிய அனுமதியை பெற்று மணல், கல் அகழ்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.

மணல் அகழ்வு:- குடமுருட்டி,
கௌதாரிமுனை
கல் அகழ்வு :- முழங்காவில்

இவ்விடங்களை தவிர்ந்த ஏனைய இடங்களில் மணல், கல் ஏற்றுவது சட்ட விரோதமானதாகும். அத்துடன் 01.08.2003 தொடக்கம் மணல், கல் ஏற்றுவோர் அவ்வப்பகுதி கிராம அலுவலரின் ஊடாக பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்று, எமது பிரதேச சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டால் மாத்திரமே மண், கல் ஏற்றுவதற்கு அனுமதிக்கப்படும்.

மீறி சட்டவிரோதமாக மணல், கல் ஏற்றுவோர் மீது ரூபா 1000/= அபராதமாக விதிப்பதுடன் மணல், கல் பறிமுதல் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ் அறிவித்தல் மாவட்ட சூழல் அபிவிருத்தி சட்டத் தீர்மானத்திற்கமைவானதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

*க. தனபாலசிங்கம்*
*விசேட ஆணையாளர்,*
*பிரதேச சபை,*
*பூநகரி.*

(சி-8256)

# சாவு அறிவித்தல்

## திருமதி முத்தையா பரிபூரணம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் ஆலங்குளம் துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.முத்தையா பரிபூரணம் அவர்கள் 14-08-2003 வியாழக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையா முத்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வரதநாதன், பாக்கியலட்சுமி, சேதுநாயகி (ராசாத்தி) தங்கமணி (தேவி) சற்குணதேவி(பேபி), பத்மாவதி(பவா) அமெரிக்கா, நித்தியானந்தன் (சந்திரன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலச்சந்திரன் அம்புலன்ஸ் சாரதி மல்லாவி வைத்தியசாலை, பரராஜசிங்கம் ஆலங்குளம், சிவகுமார் கொக்காவில் வீதி, குணராசா அமெரிக்கா, கிளி கல்விளான் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் கல்விளானில் நடைபெற இருக்கின்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்
மகன் நித்தியானந்தன்

(சி-8254)

# மத்திய அரசுக்கெதிராக சோனியாவின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு

## செவ்வாய்க்கிழமை வாக்கெடுப்பு

**மத்திய அரசுக்கு எதிராக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி கொடுத்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்வரும் திங்கட்கிழமை மக்களவையில் விவகாரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.மறுநாள் செவ்வாய்க்கிழமை பிரதமர் வாஜ்பாய் விவாதத்திற்கு பதிலளிக்கவுள்ளார்.**

அதன் பின்னர் இந்தத் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடைபெறும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதையொட்டி தேசிய சனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் இன்று டில்லியில் நடைபெறவுள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தீர்மானத்தை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து முடிவு செய்யப் படவுள்ளது என்று சுஷ்மா சிவராஜ் கூறியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தை அதிகரிக்கப் போவதாக இடதுசாரிக் கட்சிகள் கூறியுள்ளன.

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையிலான மத்திய அரசின் சாதனைகளை விளக்க, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் சிறந்த வாய்ப்பாக அமையும் என துணைப் பிரதமர் கூறியுள்ளார்.

# திரிபுராவில் தீவிரவாதிகளால் 26 பேர் சுட்டுக்கொலை

திரிபுரா மாநிலத்தில் மேற்கு மாவட்டத்தில் இரண்டு கிராமங்களில் நேற்று முன்தினம்தீவிரவாதிகள் 26 பேரைச் சுட்டுக்கொன்றுள்ளதாக இந்தியச் செய்திகள் கூறியுள்ளன. இதில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

தீவிரவாதிகள் கமலநகர் கிராமத்தில் 11 பேரையும் கிஸ்ணகூர் எனுமிடத்தில் 15 பேரையும் சுட்டுக் கொன்றுள்ளதாக அக்ளாத் காவல் துறையினர் கூறியுள்ளார்கள்.

தீவிரவாதிகளின் இந்த தாக்கு தலையடுத்து திரிபுரா மாநிலம் எங்கும் எச்சரிக்கைநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

# பா. ஜ. க. - தி. மு. க. இடையே உறவு முன்பிருந்தது போலவே உள்ளது

### இல.கணேசன் தெரிவிப்பு

பாரதீய ஜனதாக் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குமிடையே உள்ள உறவு முன்பு இருந்தது போலவே இன்றும் உள்ளது என்று பாரதீய ஜனதாக் கட்சி செயலாளர் இல-கணேசன் கூறியுள்ளார்.

திருச்சிராப்பள்ளியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

மக்களவைத் தேர்தல்கள் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக, பாரதீய ஜனதாக்கட்சி தனது கூட்டணி அணுகுமுறையை வெளிப்படுத்தாது என்றும் கூறியுள்ளார்.

# பாகிஸ்தானுடன் நட்புறவையே இந்தியா விரும்புகின்றது

### சுதந்திரதின உரையில் வாஜ்பாய்

உலகில் அமைதியை நிலைநாட்டுவதில் இந்தியா முன்னிலை பெற்று வருவதாகவும், பாகிஸ்தானுடன் இந்தியா நட்புறவைக் கொண்டிருக்க விரும்புவதாகவும் பிரதமர் வாஜ்பாய் நேற்று சுதந்திரதின விழாவில் கூறியுள்ளார்.

அத்துடன் இதற்கான முன் முயற்சியை இந்தியா கொண்டிருப்பதும், எடுத்திருப்பதும் பலவீனமல்ல. இரு நாட்டு மக்களும் அமைதியுடன் வாழவே விரும்புகின்றார்கள்.

எனினும் பாகிஸ்தானுடனான. அமைதிப் பேச்சுக்கள் எல்லை தாண்டி ஊக்குவிக்கப்படும் தீவிரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப் பட்டுள்ளன என்றும். இரு நாட்டு உறவை மேம்படுத்த பாகிஸ்தான் இந்திய விரோத மனப்பான்மையைக் கைவிட்டு எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் 57ஆவது சுதந்திர தினத்தையொட்டி நேற்று செங்கோட்டையில் கொடியேறிய பின்னர் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



இந்தியாவிலிருந்து சென்ற பாராளுமன்ற நட்புறவுக்குழு பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பைச் சந்தித்து சால்வையொன்றை வழங்கியது.

# அமெரிக்கக் கடற்படையினர் 200 பேர் மொன்ரோவியாவிற்குள் பிரவேசம்

மேற்கு ஆபிரிக்கச் சமாதானப் படையினரிடம் லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவை ஒப்படைக்கும் விதமாக மொன்ரோவியாவை விட்டு லைபீரிய கிளர்ச்சியாளர்கள் விலகியுள்ள நிலையில் லைபீரியக் கரையில் போர்க்கப்பல்களில் நிலை கொண்டுள்ள அமெரிக்கக் கடற்படையினரில் 200 பேர் நேற்று முன்தினம் மொன்ரோவியாவிற்குள் அனுப்பபட்டுள்ளனர்.



மொன்ரோவியாவில் அமெரிக்கப்படை.

அமெரிக்க சமாதானப் படைகள் லைபீரியாவிற்குள் அனுப்பப்பட வேண்டுமானால் சனாதிபதி சார்ளஸ் ரெயிலர் பதவி விலகி நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அமெரிக்கா முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது ரெயிலர் பதவி விலகி நைஜீரியாவிற்குச் சென்றுள்ள நிலையில், லைபீரியாவிற்குள் அமெரிக்கா தனது படைகளை அனுப்பியுள்ளமை, லைபீரியாவில் அமெரிக்கப் படைகளது பங்களிப்பு அதிகரித்து வருவதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

தேவைப்படின் நைஜீரியப் படைகளுக்கு உதவுவதற்காக உடனடியாக செயற்படும் படைகளின் ஒரு பகுதியாக தற்போது அனுப்பப்படும் 200 கடற்படையினர் செயற்படுவர் என்று அமெரிக்க இராணுவத்தின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான விமான படையின் மேஜர் ஜெனரல் நோட்டோர் ஷ்வாட்ஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது மொன்ரோவியாவில் 800 நைஜீரிய சமாதானப் படைகள் நிலை கொண்டுள்ளன. மேலும் நைஜீரியப் படையினர் நேற்று முன்தினம் மொன்ரோவியாவை சென்றடைவர் என்று எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மொன்ரோவியாவை விட்டு லைபீரியக் கிளர்ச்சியாளர்கள் விலகிய பின்னர் நேற்று முன்தினம் மதியம் மொன்ரோவியத் துறைமுகத்தை நைஜீரியப் படைகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துறைமுகத்தை மீளந் திறந்தால் தற்போது மோசமான, மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையிலுள்ள லைபீரிய மக்களுக்கு உணவுப் பொருட்களையும் கப்பல் மூலம் லைபீரியாவுக்குக் கொண்டு வரக் கூடியதாக இருக்கும் என்று மனிதாபிமான உதவிப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரெயிலருக்குப் பின்னர் சனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள மோசஸ் பிளாஹ் விரைவில், லைபீரியாவில் சமாதான முயற்சிகளுக்கு உதவி செய்யும் வகையில் அமெரிக்க ஜெட் விமானங்கள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த ஜுன் மாதத்திலிருந்து லைபீரிய சமாதான முயற்சிகள் இடம்பெற்றுவரும் கானாவில் தலைநகர் அக்ராவிற்கு மோசஸ் பிளாஹ் நேற்று முன்தினம் சென்றுள்ளார். ரெயிலருடன், மோசஸ் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர் என்ற காரணத்தினால் மோசஸை நிராகரித்துள்ள கொரில்லாக்களுடன் கானாவில் மோசஸின் சந்திப்பு எதுவும் இடம்பெறாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கப் படைகளுக்கு எதிராக ஈராக்கில் ஆயுதப் போராட்டம்

### விரைவில் உருவாகுமென எச்சரிக்கை

அமெரிக்கப் படைகளுக்கு எதிராக ஈராக்கில் ஆயுதப் போராட்டம் இடம்பெறக் கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. சிரேஷ்ட அதிகாரி கஸ்ஸான் எச்சரிக்கை செய்துள்ளார்.

பிரான்சின் வாராந்த பத்திரிகையொன்றிற்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்தின் பின் விரைவில் தமது வாழ்க்கை நிலைசீர்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்பொழுது எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. யாதாளர் பலர் ஆயுதமேந்தத் தயாராகி வருகின்றனர் என அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஈராக்கின் தென்பகுதியில் வாழும் சீக்கியர்கள் இதுவரை அமைதி காத்தனர். அவர்களும் இப்பொழுது பொறுமையிழந்துள்ளனர்.

இதற்கிடையில் அல்ஜீரா தொலைக்காட்டி நேற்றுக் கடிதம் ஒன்றைக்காண்பித்தது. அதில் சதாம் ஹுசைன அமெரிக்காவுக்கு எதிராகப் புனிதப் போர் தொடங்குமாறு சீக்கியர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.



அமெரிக்கக் கூட்டுப்படை தலைமையலுவலகம் முன் சியாக்கள் ஆர்ப்பாட்டம்.

# அமெரிக்காவில் மின் தடையால் மக்கள் தாக்குதல் குறித்து அச்சம்

அமெரிக்காவில் ஏற்பட்ட திடீர் மின்தடையால் நியூயோர்க் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் இருளில் மூழ்கின. இதனால் தீவிரவாதிகளின் தாக்குதல் ஏற்படக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டதால் பொதுமக்கள் பீதிக்குள்ளாகினார்கள்.

அமெரிக்காவில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக அந்நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரிதும் பாதிப்படைந்தன. திடீரென இருள் சூழ்ந்ததுடன் கையடக்கத் தொலைபேசிகள், இயங்காததுடன் புகையிரதம், விமானப் போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளன.

மக்களின் பயத்தைப் போக்கும் வகையில் வானொலியில் செய்திகள் மூலம் உடனுக்குடன் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ், நயாகரா நீர்வீழ்ச்சியிலுள்ள மின் உற்பத்தி மையத்தை மின்னல் தாக்கியதால் இந்த மின்தடை ஏற்பட்டதாகக் கூறியுள்ளார்.

இதனைச் சீர்செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# உலக நடப்புப்பற்றி கவலையுறாத சின்னஞ்சிறிய நாடு

உலகத்தின் கவனத்திற்கே வராத குட்டிநாடு, சின்னஞ்சிறிய நாடு என்று வர்ணிக்கப்படுவது "அண்டோரா நாடு" தான். இந்தநாடு பிரனீஸ் மலைத் தொடர்களிடையே பிரான்சிற்கும் ஸ்பெயினுக்கும் நடுவே இருக கின்றது.

இந்த "அண்டோரா நாடு" குட்டி நாடு என அழைக்கப்படக் காரணம் இல்லாமலில்லை. ஏனெனில் இதன் பரப்பு 190சதுரமைல்கள் மட்டுமே தான் மலையும் செம்மறியாடும் தவிர வேறு எதுவுமே இங்கு இல்லை. தலைநகரின் பெயரும் "அண்டோரா" தான்.

நகரில் எல்லைப் பகுதிகளில் சுமார் 07 கிராமங்கள் உள்ளன. பெரிய நாடுகளான பிரான்சும், ஸ்பெயினும் இந்தச் சிறியநாட்டிற்காக ஒருபோதும் சண்டையிட்டதே யில்லை.

ஏனெனில், 1278ஆம்ஆண்டு இந் நாட்டின் மீது "சமஉரிமை" பாராட்டி இருநாடுகளும் ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டன.

அண்டோரா அந்த ஒப்பந்தத்தை இன்றுவரையும் மதித்து ஆண்டு தோறும் பிரான்ஸிற்கு 980 பிராங்க் கும், ஸ்பெயினுக்கு460 பெசட்டாவும் கப்பமாக கட்டிக்கொண்டுதான் இருக் கின்றது.

ஆனால் தற்போது 'அண்டோரா' தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்பட்டு வருகின்றது.

உலக நடப்புப் பற்றி அண்டோரா கவலைப்படுவதில்லை என்றும் ஐ.நா.சபையில் சேரும் ஆசையும் அதற்கில்லை என்றும் கூறப்படு கின்றது.

அண்டோராவில் ஒருபடை உண்டு. கடந்த 07 நூற்றாண்டாக இந்த நாடு எந்தப் போரிலும் ஈடுபட்டதில்லை. அண்டோரா மக்கள் ஒவ்வொருவரும் துப்பாக்கி வைத்துள்ளார்கள். அனை வரும் சிறந்த படைவீரர்களே. அனை வரும் அதிகாரிகளே.

அண்டோரா சுங்கவரி விதிக்காத நாடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறைந்தவிலையில் பொருட்கள் வாங்குவதற்கு ஐரோப்பா முழுவதிலு முள்ள சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றார்கள். குளிர்காலத்திற்கு முன்புதான் சுற்றுலாப் பயணிகள் இங்கு வரமுடியும். அந்நாட்டு மக் களும் வெளியே செல்லமுடியும்.

குளிர்காலம் வந்துவிட்டால் உள் ளிருந்து வெளியேயும், வெளியே யிருந்து உள்ளேயும் செல்ல முடி யாதவாறு தரைவழிப்பாதையான பனிபடர்ந்த கணவாய் மூடிக்கொண்டு விடும்.

இங்கு ரயிலோ, விமானப் போக்கு வரத்தோ கிடையாது. பனிபடர்ந்த கணவாய்ப்பாதை வளைந்து வளைந்து செல்லும். இதுமட்டும் தான் பாதை.

குளிர்காலம் முடிந்தபின்னர் மூடிக் கொண்ட தனிவழிக் கணவாய் மீண் டும் திறந்து கொள்ளும் என்று கூறப் படுகின்றது.



வாத்துகளில் மிகப் பெரிய வாத்து 5 அடி உயரம் கொண்டது ஆகும். இதன் பெயர் "கிரேட்டர் பிளமிங்கோ" ஆகும். இந்தவகை வாத்துக்களை அமெரிக்காவிலுள்ள சான்டியாகோ நகரிலுள்ள விலங்கியல் பூங்காவில்தான் பார்க்கமுடியும். தனது குஞ்சை இறக்கைகளில் அணைத்து இரையூட்டுவதை படத்தில் காணலாம்.

# இறக்கை அடித்துப் பறக்கும் குட்டி விமானம்

பறவையைப் போல் இறக்கையடித்துப் பறக்கும் நூதனமான விமானம் ஒன்றை சென்னையைச் சேர்ந்த இளைஞன் நந்தகுமார் கண்டுபிடித்துள்ளார்.

இயந்திரம் மூலம் இறக்கையடித்துப் பறக்கும் குட்டி விமானத்தையே இவர் உருவாக்கியுள்ளார்.

இதன்மூலம் கின்னஸ் சாதனை படைக்கத் துடிக்கும் இவர் ஆபத்தான இடங்களுக்கு இயந்திரப் பறவையை அனுப்பி புகைப்படம் எடுக்கவும் திட்டமிட்டுள்ளதாகக் கூறியுள்ளார். மின்கலத்தால் இயங்கும் இயந்திர விமானத்தை முதன் முதல் உருவாக்கியுள்ளார் இந்த இளைஞன்.

பறவையைப் போன்றே இயந்திரத்தின் உதவியுடன் றக்கையடித்துப் பறக்கக்கூடிய இந்தக்குட்டி விமானத்தை தொலைஇயக்கி (றிமோட் கொன்ரோல்) மூலம் தரையிலிருந்து இயக்க முடியும்.

500 கிராம் எடைகொண்ட இந்த இயந்திரப்பறவை தரையிலிருந்து 100 அடி உயரத்திற்கு மணிக்கு 25 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியது.

சாதாரண மின்கலத்தின் திறனை வைத்து 5 நிமிடம் மட்டுமே தொடர்ந்து பறக்கக்கூடிய இந்த விமானம் தொடர்ந்து 5மணிநேரம்பூமியில் பறக்க வைத்து கின்னஸ் சாதனை படைக்கவுள்ளதாக நந்தகுமார் கூறியுள்ளார்.

இந்த இயந்திரப் பறவை மூலம் அடர்ந்த காடுகளையும் மனிதர்களால் நுழைய முடியாத ஆபத்தான இடங்களையும் கண்டறியவுள்ளதாகவும் நந்தகுமார் மேலும் கூறியுள்ளார்.



பல சரும நோய்களுக்கு மருந்தாகும் கஸ்தூரி மஞ்சளின் பூ.

# பன்றிகள் சேற்றில் உழல்வதேன்?

"பன்றி" எனும் சொல்லைக் கேட்டவுடன் எமக்கு நினைவில் வருவது குப்பையில், சேற்றில் வாழும் அழுக்குப்பிராணி என்பதுதான்.

ஆனால் விஞ்ஞாகளின் கருத்து வேறாகவுள்ளது. பன்றிஏன் சேற்றில் உழல்கின்றது என்பதற்குக் காரணம் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

பன்றிக்கு மற்றைய விலங்குகளைப்போல வியர்ப்பதில்லை. வெப்பம் மிதமிஞ்சிப் போகும் போது பன்றி சேற்றில் குளித்து வெப்பத்தைத் தணித்துக் கொள்கிறது.

அதுமட்டுமன்றி பன்றி சோம்பேறி மிருகம் என்று கூறப்படுவதையும் விஞ்ஞானிகள் மறுத்துள்ளனர்.

மிருகங்களின் இதயத் துடிப்பைப் பற்றிய பரிசோதனைகளில் ஒன்றாக பன்றிகளை ஓட்டத்தடத்தில் ஓடவிட்டார்கள். அப்போது வெகுவேகமாக ஓடி விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளது பன்றி.



விலாங்கு மீன் வகையைச் சேர்ந்த 'பிளன்னி' மீன் இனங்களில் ஒரு இனம் ஜாபிஷ் என்பதாகும். இதனை வாய்மீன் அல்லது தாடைமீன் என்றும் அழைக்கப் படுகின்றது. இந்த மீன் இனம் தனது குஞ்சுகளை தனது வாய்க்குள்ளேயே தான் வளர்க்கும். இந்த மீனின் வாய் நிறைய இருப்பது அதன் குஞ்சுகள் தான்.

# நிலத்தில் வாழும் பாலூட்டியாக வகைப்படுத்தப்பட்டுள்ள நீர்நாய்

நீர்நாய் (Beaver) வட அமெரிக்கக் கண்டத்திலும் மத்திய ஐரோப்பாவிலும் அதிகமாக வளர்கின்றன. இது ரோடென்ஷியா (Rodentia) என்னும் கொறித் துண்ணி இனத்தில் காஸ்டரிடே (Castoridae) என்னும் நறுமணச் சுரப்பிக் குடும்பத்தைச் சேர்ந்த பாலூட்டியாக உள்ளது.

நீர்நாய் நிலத்தில் வாழும் பாலூட்டி என்றே வகைப் படுத்தப் படுகிறது. ஆனால் பெரும்பாலான நேரத்தை அது தண்ணீரிலேயே செலவழிக்கின்றது. வருடத்திற்கு இரண்டே இரண்டு முறை நிலத்திற்கு வருகின்றது. ஒருமுறை குட்டி போட, மறுமுறை தோலுரிக்க. தண் ணீரில் வாழ்வதற்கு அது நன்றாகப் பழகிவிட்டதாக கடலாராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

தண்ணீரில் மூழ்கிவிடாமல் இந்த நீர் நாயினால் தூங்கக் கூட முடியும் என்று கூறப்படுகின்றது.

எப்படி என்றால், நீரின் மேல் மட்டத்தில் மூக்கை மட்டும் நீட்டிக் கொண்டு செங்குத்தாக மேலும் கீழும் போய்வரும் என்று கூறப்படுகின்றது. மூச்சுவிட மட்டும் தான் மேலுக்கு வருகின்றது. அதுவும் தூக்கம் கலை யாத படிதான். நீர்நாயால் தண்ணீர் அழுத்தத்தின் பாதிப்பு எதுவு மின்றி 140 மீற்றர் ஆழத்திற்கும் கீழே மூழ்கிச் செல்ல முடியும் என்றும் கடலாராய்ச்சியாளர் கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றைவிட நீர்நாய் மரங்களைத் தனது கூர்மை யான பல்லினால் கடித்து, ஆழமான பள்ளம் உரு வாக்கி, மரத்தை எளிதில் சாய்த்துவிடும்.

இந்த மரத்தைக் கொண்டு தனக்கென ஒரு வீட்டை மேல்பாகம் தண்ணீருக்குள் இருக்குமாறும், கீழ் பாகம் நிலத்திற்குள் இருக்குமாறும், குவிமாடவடிவில் அமைத் துக் கொள்ளும்.இலையுதிர் காலம் வருவதற்கு முன்பு, இளம் செடிகளைப் பற்களால் வெட்டி தண்ணீரில் போட்டு வைக்கும். குளிர்காலத்தில் இந்தச் செடிகள் உறை நிலையிலும் பசுமையுடன் இருக்கும்.

இதனுடைய வீட்டின் மேல் பாகம் குளிர்காலத்தில் உறைந்து போய்விடும். இதனால் காற்று, பனி, வேட்டை மிருகம் எதுவும் இந்த நீர்நாயை நெருங்க முடியாது. வீட்டின் கீழ்ப்பகுதி உறையாமல் இருக்கும். அதனால் மேற்பகுதி உறைய கீழ்ப் பகுதியில் வசிக்கும்.

அதுமட்டுமன்றி, நீர்நாய் சூழலைப் பாதுகாக்கவும் உதவுவதாகக் கூறப்படுகின்றது.

நீர்நாய் அமைக்கும் அணையைச் சுற்றியுள்ள அமைப்பு தானாகவே மாறிவிடுகின்றது. நீர்நாய்கள் பலவும் அமைக்கும் அணைகள் பெரிய நீர்த் தேக்கங் களாக மாறிவிடுவதால், நீரைச் சேமிக்கவும், மீனினங் களைப் பாதுகாக்கவும் பயன்படுவதாகவும் கடலாராய்ச் சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

# இறந்த பின்பும் ஆபத்தான "கல் மீன்"

அளவில் பெரியதான சுறா மீன்கள் மட்டும்தான் மனிதனைக் கொல்லும் என்று கூறப்படுகின்றது. ஆனால் அளவில் மிகச் சிறிய மீன் வகைகளும் மனிதனைக் கொல்லும் என்று கடலாராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

இந்த மீன் வகைகளில் ஒன்று தான் ஆழமில்லாத வெப்ப மண்டலக் கடல்களில் காணப்படும் "கல் மீன்" என்பதாகும்.

ஆறு அங்குலம் முதல் ஒரு அடி வரையான நீளம் கொண்ட இந்த மீன்களின் ஆயுதம் இதன் முதுகுப் பக்கத்தில் இருக்கின்றது. இந்த முதுகுப் பக்கத்தில் உறையில் இட்ட 13 முதுகெலும்புகள் உள்ளன.

ஆபத்து என்றவுடன் அவை மேல் நோக்கி நீள்கின்றன. ஒவ் வொன்றிலும் வாய் போன்ற பள்ளம் உள்ளது. ஒவ்வொரு முது கெலும்பின் முனையிலும் இரண்டு நச்சுப் பைகள் உள்ளன.

முனைமீது ஏதாவது பட்டால், உறை பின்னோக்கி சுருண்டு கொள்ள, பையிலுள்ள நச்சு கால்வாய் வழியே ஓடி வரும்.

கல்மீனின் மீது தவறுதலாக மனிதன் காலை வைத்தால் மரணம் ஏற்படுவது உறுதி.

ஏனெனில், முதுகெலும்பு குத்துவதால் தாங்க முடியாத வலி ஏற்படுவதோடு, மனிதனின் உடலில் விஷமும் பாய்வதால் மனிதன் மரணமடைவது உறுதி என்கின்றனர் கடலாராய்ச்சியாளர்கள்.

இந்தக் கல்மீன் நிலத்தில் 10 ஆண்டுகள் வாழும் என்பதோடு இறந்த மீனின் முதுகெலும்பு கூட மனிதனுக்குக் குத்துவதனால் மரணம் ஏற்படும் என்று கூறப்படுகின்றது.

இதேபோல் தென்னமெரிக்கக் கண்டத்தில் வாழும் "பிரானா" எனும் நன்னீர் மீனுக்குக் கூர்மையான மேல் வரிசையும், கீழ் வரிசையும் பிணைந்து கொள்ளும் அமைப்புள்ள பற்கள் உண்டு. இதைத் தொட் டால், மனிதனின் கைவிரல்கள் அதன் வாய்ப்பகுதிக்குள், துண்டா டப்பட்டுச் சென்றுவிடும் என்றும் கடலாராய்ச்சியாளர்கள் தெரிவித் துள்ளார்கள்.

# சத்திர சிகிச்சையின்றி செயற்கைக் கதிர்வீச்சின் மூலம்...

விஞ்ஞானம் இன்று செயற்கைக் கதிர்வீச்சை சாத்தியமாக்கியிருக்கின் றது. செயற்கைக் கதிர்வீச்சை மருத் துவம் பிரதானமாகப் பயன் படுத்து கின்றது. ஹேவாக்-60 காமாக் கதிர் களை வெளிப்படுத்துகின்றது.

1950இல் இருந்தே புற்றுநோயைக குணப்படுத்துவதற்காக இக்கதிர் கள் பயன்படுத்தப்படுகின்றன.

மனித உயிர் கலத்தில் ரி.என்.ஏ. மளுக்களில் ஏற்பட்டுள்ள பழுதை இக்கதிர்கள் சரி செய்கின்றன.

காமாக்கதிர்கள் உடலில் கலங் கள் செலுத்தப்படுகையில் அவை ரி.என்.ஏ. மளுக்களைத் துன்டிக்கின் றன.

இவ்வாறு இரண்டு முறை துண் டிக்கப்படும் ரி.என்.ஏ. மளுக்கள் புற்று நோய்க் கலங்களைத் தவிர்க்கின்றன.

இவ்வாறு புற்றுநோய்க் கலங் களின் செயற்பாடுகள் தவிர்க்கப் படுகின்றன, தடை செய்யப்படுகின் றன.

நோயாளியின் உடலில் எந்தப் பகுதி தீர்வுக்குட்பட வேண்டும் என் பது தீர்மானிக்கப்படுகிறது.

உடலில் எந்தப்பகுதி தீர்வுக்குட் பட வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்ட பின்னால், கதிர் வீச்சுக்குரிய பகுதியில் ஈயம் பூசப் படுகின்றது.

காமாக்கதிர்களை ஈர்க்கும் திறன் ஈயத்திற்கு இருக்கின்றது. புற்று நோய்க் கலங்களுக்குப் பதிலாக திடமான கலங்கள் அழிக்கப்படும் அபாயத்தைத் தடுப்பதற்கு முதல் ஏது செய்யப்படுகின்றது. நிடமான கலங்கள் நீங்கலாக புற்றுநோய்க் கலங்கள் மட்டும் குறி வைக்கப்படு கின்றன. பின் அவைகளின் மேல் கதிர்வீச்சு நிகழ்த்தப்படுகின்றது.

உலகெங்கும் இன்று இந்த காமாக்கதிர் மூலம் பயன் பெறுவோர் தொகை அதிகரித்து வருகின்றது. ஏனெனில் உடலை சத்திரசிகிச் சைக்கு உட்படுத்தத் தேவை யில்லை என்பதால்.

மனித உடலின் ஒவ்வோர் அங் கத்திற்கும் ஒவ்வோர் தன்மை இருக் கின்றது. மனித மூளையின் இரசா யனத் தன்மையை நாம் அறிவோம்.

இப்படித் தேவைப்படும் அங்கத்திற் குள் ஒருவித இரசாயனத்தைச் செலுத்தி அதை "ஸ்கான்" செய்யும் முறையை "சென்னீஸ் ஸ்கான்" என்று அழைக்கப்படுகின்றது.

கதிர்வீச்சின் போதே நோயாளி யைச் சுற்றிலும் புகைப்படம் எடுக் கப்படுகின்றது. குறிப்பிட்ட அங்கம் மட்டும் தனியாகப் படம் பிடிக்கப் படுகின்றது. இதை எந்தக் கோணத் திலிருந்தும் பார்க்க முடியும்.

இவ்வகையில் மூளையில் இருக் கும் கட்டியோ, மூளையின் ரத்த ஓட்டமோ, இன்னும் பல விடயங் களும் கூர்ந்து அறியப்படுகின்றன.

இவ்வகை ஆராய்ச்சிகள் உட லுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற் படுத்துவதில்லை. அறுவைச் சிகிச்சை களற்ற சிகிச்சை முறைகள் இன்று சர்வ சாதாரணமாக, சௌகரியமாக வும் வந்து விட்டன.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் நோய்களைக் குணப்படுத்த, தள்ளி வைத்து விட முடிகின்றது என்பது விஞ்ஞானத்தின் பெருமையாகும்.



நேற்று முன்தினம் நடைபெற்ற கிளி. மகாவித்தியாலய புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவில் யுனிசெவ் பிரதிநிதி மைக்கல் கோப்லண்ட் மண்டபத்தைத் திறந்து வைப்பதையும், நினைவுக் கல்லை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம. பத்மநாதன் திரைநீக்கம் செய்து வைப்பதனையும் படங்களில் காணலாம்.
(படங்கள் : லோகீசன்)

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக ஆலோசனை சமர்ப்பிக்கக் கோரிக்கை

(கொழும்பு)
ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக இரண்டு வாரத்தினுள் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஆசிரியர் சம்பந்தமான தேசிய இடமாற்றக் கொள்கை தயாரிக்கப்படுமென நேற்று முன்தினம் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளைக் கருணாசேன கொடித்துவக்கு சந்தித்தபோது கூறியுள்ளார். அத்துடன் இப்பிரேரணைகளை நடைமுறைக்கிடுவதற்கான வழிமுறைகள் பற்றி தீர்மானிப்பதற்கென குழு ஒன்று இரண்டு வாரத்தினுள் நியமிக்கப்படுமெனக் கூறியுள்ளார். தேசிய பாடசாலைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கல்வியமைச்சிற்கு பூரண அதிகாரம் உண்டெனவும், மாகாண மட்ட இடமாற்றங்களை மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவே மேற்கொள்ளுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அம்பாறை மாவட்டத்தின்
# காணிப் பிரச்சினைகள் தொடர்பாக புலிகள்–முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து இடம்பெறும் காணிப்பிரச்சினைகள் தொடர்பாக புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமான நான்காவது மாவட்ட மட்ட உப குழுக்கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்திற்கு கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளான ரெர்ஜிஹுல் வசன், பீற்றாலீ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றுள்ளது. புலிகளின் சார்பில் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் மூன்று பேரும், முஸ்லிம்கள் சார்பில் எம்.ஐ.முகைதீன் தலைமையில் ஐந்துபேரும் கலந்துகொண்டனர். அத்துடன் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு உட்பட இக்கூட்டத்திற்கு அம்பாறை மாவட்ட பிரதேச செயலாளர்களும் கலந்துகொண்டுள்ளனர். இச்சந்திப்பின்போது பல பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு காணப்பட்டதுடன் ஏனைய பிரச்சினைகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னர் தீர்வு காணப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எழுதுமட்டுவாள் காவலரணில்
# அதிகாரி கண்டித்ததால் சிப்பாய் துப்பாக்கிச் சூடு

எழுதுமட்டுவாள் பகுதியில் இராணுவ காவலரணிலிருந்த இராணுவ சிப்பாய் ஒருவரின் தவறான நடவடிக்கையை அவரது அதிகாரி கண்டித்ததையடுத்து திடீரென கண்மூடித்தனமாக அங்குமிங்கும் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பியோட முயன்றபோது, இராணுவத்தினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

எனினும் இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் எவரும் காயமடையவில்லை என்றும், மேற்படி சிப்பாய் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும், இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

# பரீட்சை முடிவைப் பார்க்கச் சென்ற மாணவனைக் காணவில்லை

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபெற்றைப் பார்வையிடுவதற்காக சண்டிலிப்பாயிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த மாணவரைக் காணவில்லையென நேற்று முன்தினம் உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரப்பரீட்சை முடிவு வெளியாகிய பின் யாழ். இந்துக் கல்லூரி மாணவனான குணரெட்ணம் ஜெயப்பிரகாஷ் (வயது-20) என்பவரே தனது பரீட்சைப் பெறுபேற்றைப் பார்வையிடுவதற்காக மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளார்.

ஆனால் அந்த மாணவன் இது வரை வீடு திரும்பவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பாதாள உலகக் குழுத் தலைவர் உட்பட 28 உறுப்பினர்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)
பாதாள உலகக் குழுவொன்றின் தலைவர் உட்பட 28 உறுப்பினர்களை விசேட புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். சிறிலங்காப் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கிவரும் விசேட பொலிஸ் பிரிவினரே இவர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இப்பாதாள உலகக் குழு உறுப்பினர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் 15 கொலைச் சம்பவங்கள் மற்றும் 28 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக விசேட பொலிஸ் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட இந்தப் பாதாள உலகக் குழுவினர் கொள்ளையடித்து விற்பனை செய்த 9 வாகனங்களும் அவர்களின் கொள்ளைச் சம்பவங்களின்போது பயன் படுத்திய துப்பாக்கி உள்ளிட்ட பத்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## தேர்தலுக்கு தயாராகின்றது

(கொழும்பு)
மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுமானால் அதில் போட்டியிட ஜே.வி.பி. தயாராகி வருகின்றது. தேர்தல் வேட்பாளர்கள் தெரிவு, கட்சி அங்கத்தவர்களைச் சேர்த்தல் என்பனவற்றில் ஜே.வி.பி. துரிதமாக ஈடுபட்டு வருகின்றது. இத்தகவலை ஜே.வி.பியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். வெலிங்டன் சந்தியில்
# ராணுவக் காவலரண் விஸ்தரிப்பு; விபத்துக்கள் அதிகரிக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ். வெலிங்டன் திரையரங்குச் சந்தியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் விபத்து ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகரித்துள்ளது. யாழ். நகர மத்தியில் மணிக்கூட்டு வீதி மற்றும விக்டோரியா வீதி உட்பட்ட பிரதேசத்தை மையமாகக் கொண்டு கடந்த ஏழு ஆண்டுகளாக யாழ் நகரின் அபிவிருத்திக்கு இடையூறாக, நகர மையத்தில் 512ஆம் பிரிகேட் தளம் அமைந்துள்ளது. இத்தளத்தில் ஸ்ரான்லி வீதிப் பகுதியாகவுள்ள காவலரண்களில் மணிக்கூட்டு வீதியும், ஸ்ரான்லி வீதியும் சந்திக்கும் சந்திப் பகுதியில் அமைந்த மேற்படி காவலரண் ஸ்ரான்லி வீதியின் ஒரு பகுதியை முற்றாக ஆக்கிரமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால், யாழ்ப்பாணத்தில் மிக பிரதானமானதும், போக்குவரத்து நெருக்கடி அதிகமானதுமான இவ்வீதி தினமும் விபத்து நடைபெறும் அபாயமான பகுதியாக மாறியுள்ளது.இது சம்பந்தமாகப் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென மக்களும், வாகன சாரதிகளும் கவலை தெரிவித்துள்ளனர். (33)

# செல்வந்தர்களுக்கு காணி வழங்கும் அரசியல் வழிமுறைக்கு முற்றுப்புள்ளி
## – அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிப்பு

செல்வந்தர்களுக்கு அரச காணிகளை வழங்கும் அரசியல் வழிமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென காணியமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார். அரசின் காணிக்கொள்கை பற்றி விளக்கமளித்த அவர், ஒரு அங்குலக் காணி கூட இல்லாத ஏழை மக்களுக்கு காணியை வழங்குவது அரசியல் கொள்கையாகுமெனத் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் கூறுகையில், அரசிற்குச் சொந்தமான எந்தவிதக் காணியும் நாட்டில் இல்லையெனவும், நிலம் முழுவதும் மக்களுக்கே சொந்தமானதெனவும் கூறியுள்ளார்.

# தொல்லை தராத நிறுவனம் யாழ். பல்கலைக்கழகம்
## மானியக் குழுத் தலைவர் தெரிவிப்பு

வடக்கு-கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்கள் தான் பிரச்சினைகள் இல்லாதவைகளாக இருப்பதாகத் தெரிவித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.ஆர். என். மென்டிஸ் இதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொல்லைகளைத் தராத ஒரு கல்வி நிறுவனமாகத் திகழ்வது போற்றுவதற்குரியதெனத் தெரிவித்தார்.

கொழும்பில் புதனன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கிலும், கிழக்கிலும் பல்கலைக்கழகங்கள் கிரமமாக இயங்குகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் அழப்பரியன.

மாணவர்களை அனுமதிக்கும் செயற்பாடுகள் அங்கே முறையாக இடம்பெற்று வருகின்றன. எப்போதும் நிதி அல்லது இதர பிரச்சினைகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து வருவதில்லை.

இதர பல்கலைக்கழகங்களுக்கு இது சிறந்த முன்மாதிரியாகும். தமிழரோ, சிங்களவரோ ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்பவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

இவ்வாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

## அடிப்படைக் கட்டுமானங்கள் இல்லை
# கைவிடப்படக்கூடிய நிலையில் ஆறு விவசாயக் கிராமங்கள்

ஏ-9 கண்டி வீதியையும், துணுக்காய் - மாங்குளம் வீதியையும் இணைக்கும் வகையில் அமைந்துள்ள கொக்காவில் வீதி ஏறத்தாழ ஆறு விவசாயக் கிராமங்களை உள்ளிடக்கியதாகக் காணப்படுவதோடு இது ஒரு 'பி' தரத்திலான வீதியாகவும் உள்ளது. இப்பகுதியிலுள்ள கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றியே வாழ்ந்து வருகின்றனர்.

தேறான்கண்டல் கிராமம் மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து குடியேறிய மக்கள் வாழ்கின்ற ஒரு இடமாகக் காணப்படுகின்றது. இங்கு மருத்துவ வசதி முற்றுமுழுதாகவே இல்லாதுள்ளது. துணுக்காய் கல்வி வலயத்தில் மகிழ்ச்சிகரக் கல்வியூட்டலுக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளில் தேறான்கண்டல் அ.த.க. பாடசாலையும் ஒன்று. இப்பாடசாலையில் 200 வரையான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆனால், இங்கு 12 ஆசிரியர்கள் தேவையானவிடத்து 06 ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறை ஒருபுறமிருக்க, போதிய வகுப்பறைக்கான கட்டட வசதி, குடிநீர்க்கிணறு, மலசலகூடம், ஆசிரியர் விடுதி, விளையாட்டு மைதானம் எதுவுமற்ற நிலையில் காணப்படுகின்றது. இக்கிராம மக்கள் கூலித் தொழிலை மேற்கொள்வதனால் இவர்களின் பிள்ளைகளின் போசாக்குநிலை மிகமோசமான நிலையில் காணப்பட்டமையால் 19 யூன் 1993இல் கலைமகள் சிறுவர் போசாக்கு நிலையம் என்ற பெயரில் போசாக்கு நிலையத்தினை நிறுவி போசாக்குக் குறைபாடான சிறுவர்களை உள்வாங்கி பராமரித்து வருகின்றது.

அடுத்து ஐயன்கன் குளத்தினை மையமாகக் கொண்டு 200இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்துவரும் இவ்விடத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை இயங்கிவருகின்றது. இதன் மூலம் பெருமளவான மக்கள் பயனடைந்து வருகின்றனர். இதைவிடக் கிராம சேவையாளர் அலுவலகமும் உள்ளது. அதுவும் எல்லா நாட்களிலும் இயங்குவதாகவும் தெரியவில்லை. இங்கு அமைந்துள்ள பாடசாலை தரம் 9 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஆரம்ப பாடசாலையாகும் இப்பாடசாலையில் 204 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில் ஒன்பது ஆசிரியர்கள் தேவையான விடத்து ஐந்து ஆசிரியர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர். இங்கும் குடிநீர், ஆசிரியர் விடுதி, நிரந்தரக் கட்டடம், விளையாட்டு மைதானம் எதுவுமே இல்லாது உள்ளது.

இதேபோன்று, பழையமுறிகண்டி, மருதன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களும் உள்ளன. கிட்டத்தட்ட 20 கிலோ மீற்றர் நீளமான ஒரு பிரதான வீதியை மையமாகக் கொண்ட இக்கிராமங்களில் வாழ்கின்ற மக்கள தமது அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதாயின் மல்லாவி நகருக்கோ அல்லது கொக்காவில் சந்தியூடாக ஏ-9 வீதியினூடாக கிளிநொச்சி நகருக்கோ செல்ல வேண்டியுள்ளது.

இக்கிராமங்களில் வசித்து வருகின்ற மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேற்படி இரு நகரில ஏதாவது ஒரு இடத்திற்குச் செல்வதாயின் வாகன வசதியில்லை. இவ்வீதியினூடாகப் போக்குவரத்துப் பேருந்துகள்கூடச் செல்வதில்லை. மக்கள் மிதிவண்டிகளிலோ அல்லது கால்நடையாகவோ சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதை அவதானிக்க முடிகின்றது.

இவை இவ்வாறிருக்க, இவ்வீதி கடந்த 13 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படவில்லை என்றும் மேற்படி கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். இக்கிராமங்களில் இருந்து சில குடும்பங்கள் தமது தேவைகளைக் கருத்திற் கொண்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியேறி வருகின்றனர். இக்கிராமங்களில் இவ்வாறு இந் நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இக்கிராமங்கள் அழிந்து போகும் வாய்ப்பு உள்ளதை அவதானிக்க முடிகின்றது. (பா)

# கிளி. காவல் பணிமனையினரால் திருட்டுப் பொருட்கள் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி காவல் பணிமனையினரால் திருட்டுப்போன பொருட்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன. திருநகர்ப் பகுதியில் இருந்து 45000 ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று ஐந்தாம் மாதம் 29ஆம் திகதி திருட்டுப் போயிருந்தது. இந்த மோட்டார் சைக்கிள் பளைப் பகுதியில் வைத்து கடந்த மாதம் 24ஆம் திகதி கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் கிளி. மாவட்ட நீதிமன்றில் கிளிநொச்சி காவல் பணிமனையினரால் முற்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள பார ஊர்திகள் சங்கத்துக்குச் சொந்தமான 11000 ரூபா பெறுமதியான வானொலிப் பெட்டி ஒன்றும் கடந்த மாதம் 2ஆம் திகதியன்று திருட்டுப் போயிருந்தது. இதனைத் திருடியவர் வேறு ஒருவருக்கு விற்பனை செய்த வேளை, கடந்த மாதம் 24ஆம் திகதி மேற்படி பொருளையும் சந்தேக நபரையும் கைது செய்து கடந்த 09 ஆம் திகதி கிளி. மாவட்ட நீதி மன்றில் முற்படுத்தியுள்ளனர். (லோ)

# கிராம அலுவலர்களுக்கான திறன்விருத்தி பயிற்சிப்பட்டறை

(கண்டாவளை)

போறூட் நிறுவன ஆதரவுடன் கிராம அலுவலர்களுக்கான திறன் விருத்திப் பயிற்சிப்பட்டறை இன்று முதல் 19ஆம் திகதி வரை கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனை யில் நடைபெற உள்ளதால் சகல கிராம சேவகர்களையும் தவறாது இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கண்டா வளைப் பிரதேச செயலர் பி.கா மத்தியாஸ் அறிவித்துள்ளார். (14)

# கரைதுறைப்பற்று பிரதேசத்தில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 22 பாடசாலைகள் இருந்தபோதும் 7 பாடசாலைகளில் மட்டும் ஆங்கில ஆசிரியர்கள் உள்ளனர். இதனால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந் துள்ளதாக அதிபர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய கல்வித் திட்டத்தில் ஆங்கிலபாடம் மிக முக்கியமானதொன்று. அவ்வாறு இருக்க ஆங்கில ஆசிரியர்கள் இல்லையானால் எதிர்காலத்தில் மாணவர்களின் கல்வி நிலை கேள்விக்குறியாகவே அமையும் என்பதிற் ஐயமில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கருத்திற் கொண்டு ஆங்கில ஆசிரியர்களை நியமித்து உதவும் வண்ணம் பாடசாலைகளின் அபிவிருத்திச் சபையினர் கேட்டுக் கொள்கின்றனர். (20)

## - பூநகரிப் பிரதேசசபை எல்லைக்குள் -

# சட்டவிரோத மண் அகழ்வோர் மீது நடவடிக்கை எடுக்கத் திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

பூநகரிப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சில இடங்களில் சட்ட விரோதமாக மணல்,கல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து பூநகரிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் க.தனபாலசிங்கத்துடன் எமது செய்தியாளர் தொடர்புகொண்டபொழுது,

பூநகரிப் பிரதேசஎல்லைக்குட்பட்டசில இடங்களில் மேற்படி சட்டவிரோத மண்,கல் அகழ்வுகள் இடம்பெற்று வருகிறது. இதன் காரணமாக எமது பிரிவுச் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

இதனை தடுத்து நிறுத்தி பேரழிவிலிருந்து சூழலைக் காப்பாற்றும் முகமாகக் கீழ் குறிப்பிடும், அதாவது குடமுருட்டி, கௌதாரிமுனைப் பகுதிகளில் மணல் அகழ்வினையும் முழங்காவில் பகுதியில் கல் அகழ்வு நடவடிக்கையினையும் மேற்கொள்ளலாமென அவர் கூறினார். இதனை மீறி அகழ்வோர் மீது மாவட்டசூழல் அபிவிருத்தி சட்ட தீர்மானத்திற்கமைவாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டம் அறவிடப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (சோ)

# நெடுங்கேணி ம.வி. யில் 17 மாணவர்கள் இடைவிலகல்

(முல்லைத்தீவு)

வவுனியா வடக்கு கல்விவலயத்துக்குட்பட்ட நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் இருந்து அண்மைக் காலத்தில் 17 மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தி இருப்பதாக மேற்படி பாடசாலை அதிபர் மு.குகதாசன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாடசாலை கற்றல் செயற்பாடுகளில் இருந்து இடைவிலகுவதற்கு மாணவர்களின் வறுமை நிலையே முக்கியமான காரணமாக அமைகிறது. யுத்தம் காரணமாகத் தமது பொருளாதாரத்தை நெடுங்கேணி மக்கள் இழந்தனர். இவ்வாறு இந்நிலையில், இப்பகுதியில் இருந்து கல்வி கற்கும் மாணவர்கள் போசாக்கு நிலையில் பெருமளவு பின்தங்கிஉள்ளனர். இதனாலேயே மிகவும் குறுகிய காலத்தில் 17 மாணவர்கள் தமது கற்றல்செயற்பாட்டை இடைநிறுத்தி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (லோ)

# ஆங்கில தினப்போட்டியில் முல்லை.ம.வி. முதலிடம்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில தினப்போட்டியில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இதில்22 பாடசாலைகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (20)

# பொருட்கள் வழங்கல்

(முல்லைத்தீவு)

தண்ணிமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த எட்டுக் குடும்பங்களுக்கு உணவு அல்லாத பொருட்கள் கடந்த 13ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் முல்லைப் பொருளாதர அபிவிருத்தி நிறுவனமும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரும் இணைந்து இப்பொருட்களை வழங்கியுள்ளன. (20)

# சவேரியார் அடிப்படைக் கல்வியூட்டல் மாணவர்களின் பெற்றோர் கருத்தரங்கு

(கண்டாவளை)

தருமபுரம் சவேரியார் இளைஞர் உருவாக்கல் இயக்க ஆதரவுடன் இடம் பெற்றுவரும் "அடிப்படை கல்வியூட்டல்" மாணவர்களின் பெற்றோர்களுக்கான ஒன்றுகூடல் கருத்தரங்கு கிளி/குமாரசாமிபுரம் அ.த.க பாடசாலையில் கடந்த 13ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு உருவாக்கல் இயக்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. தருமபுரம் பங்குத் தந்தை யூட் நிக்சனின் ஒழுங்குபடுத்தலுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் விசுவமடு வலயப் பொறுப்பாளர் ஜெயம், பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளர் கந்தசாமி, விசுவமடு ம.வி. அதிபர், கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர், பெற்றோர் எனப்பலர் கலந்து சிறப்பித்தனர். பிரதி சனிதோறும் இடம் பெற்றுவரும் அடிப்படைக் கல்வியூட்டல் வகுப்பில் 250க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்து வருகின்றனர். (14)

# சாமிப்புலம் திலீபன் மருத்துவமனையில் கடந்த மாதம் 1700 பேருக்குச் சிகிச்சை

கடந்த மாதம் பூநகரி சாமிப்புலம் தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் 1700 நோயாளர்கள் மருத்துவ சேவையைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் சுவாசத்தொற்று, தொய்வு, காய்ச்சல், கண்,காது வியாதிகளுக்குச் சிகிச்சை பெற்றுள்ளனர். (34)

# கைதான 8 போராளிகளுக்கு 28ஆம் திகதி வரை விளக்கமறியல்

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் சோதனைச்சாவடியில் வைத்து கைதுசெய்யப்பட்ட 08 போராளிகளையும் இம் மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் அஸ்லின் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தின் முன்நிறுத்தப்பட்ட போது கைப்பற்றப்பட்ட வெடிப்பொருட்களை இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு பொலிசார் மனுச்செய்ததைத் தொடர்ந்து நீதவான் அதற்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயிற்சி வகுப்பு

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும இணைந்து நடாத்தும் நடமாடும் சேவையில் கால்நடை பண்ணையாளர்களுக்கான பயிற்சி நடாத்தப்பட்டுள்ளது.

கால்நடை வைத்தியர் வசீகரனின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை 2.30 மணியளவில் துணுக்காய் கமநலசேவை நிலையத்தில் பயிற்சி நடைபெற்றது.

கால்நடைகளுக்கு ஏற்படும் நோயகள் பற்றியும் செயற்கை முறையில் இன விருத்தி பற்றியும் பண்ணையாளர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. கருத்துரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை மாவட்ட கால்நடை விரிவாக்க அலுவலர் பாஸ்கரன் வழங்கினார். (05)


## களரக வாகன ஓட்டுனர் பயிற்சியும் சாரதி அனுமதிப்பத்திரமும்

SELVA LEARNERS

KILINOCHCHI

செல்வா சாரதிப்பயிற்சி நிறுவனம், எஸ்.எல்.எஸ்., கிளிநொச்சி.

(சி-8455)


# முல்லைத்தீவு மாவட்ட சி.க.கூ.சங்க அங்கத்தவர்களுக்கு கடனுதவி வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட சிக்கனக் கடனுதவுகூட்டுறவுச் சங்கங்களுக்கு வன்னிப் புனர்வாழ்வு அமைச்சினால் மானியமாக வழங்கப்பட்ட 20 இலட்சம் ரூபா பணம் சங்க அங்கத்தவர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.



முல்லை.அரச செயற்திட்ட இணைப்பாளர் சிதம்பரப்பிள்ளை சி.க.கூ. சங்க உறுப்பினருக்கு கடனுதவி வழங்குகின்றார்.

முல்லை. செயலக மாநாட்டு மண்டபத்தில் சி.க.கூ.சங்க முல்லை மாவட்டத் தலைவர் ம.சூசைமுத்து தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருததுரைகளை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவமயம் முல்லை. அரச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இரட்ணராஜா, திட்டப்பணிப்பாளர் சிதரப்பிள்ளை, தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவு இணைப்பாளர் மூர்த்தி சி.க.கூ.சங்கப பிராந்திய சேவை உப தலைவர் கா.குணசிங்கம் ஆகியோர் வழங்கினர்.

புதுக்குடியிருப்பு, பாண்டியன்குளம், துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று ஆகிய பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள சி.க.கூ.சங்க அங்கத்தவர்களுக்கு 20 இலட்சம் ரூபா பணமும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டது. (20)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு * 25 * 02 * 1946



உதிர்வு * 18 * 17 * 2003

அமரர்

செல்லத்துரை மத்தியூஸ் கபிரியல்

(உற்பத்தி முகாமையாளர் மாந்தை உப்பு லிமிற்ரெட்)

18-07-2003 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த அன்புத் தெய்வத்தின் துயரச் செய்தியைக் கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிநிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு 17-08-2003, நாளை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர், பணியாளர்கள், போராளிகள்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: லொயிட்
புதிய புன்னை நீராவி,
விசுவமடு.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(3633)



### சிந்தனைக்கு

எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிற்பதால் மற்றவர்களின் அழுத்தங் களிற்குப் பணிந்து கொ—ாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்க முடிகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 16-08-2003

## பக்கச் சார்பு!

வடபிரதேசக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களின் பிரவேசத்திற்கு பக்கச்சார்பான மனோ நிலையுடன் கூடிய செயற்பாடே காரணம் என்ற அகில இலங்கைக் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஹெமன் குமாரவின் குற்றச்சாட்டானது ஓர் அரசியல்வாதியின் குற்றச்சாட்டல்ல. மீனவர்களின் பிரச்சினைகளை நன்குணர்ந்த ஒரு தொழிற்சங்கவாதியின் குற்றச்சாட்டாகும்.

வடபிரதேசக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறலானது தெரியாமல் செய்யப்படுவதொன்றல்ல. நன்கு தெரிந்து கொண்டு திட்டமிட்ட ரீதியில் அன்றித் திட்டமிடாதுவிட்டாலும் தெரிந்து கொண்டு மேற்கொள்ளும் நடவடிக்கையாகும். ஆனால், அதனை அவர்கள் இன்று தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு வாய்ப்பாக சந்தர்ப்பம் அளிப்பதாக சிறிலங்கா கடற்படையின் நடவடிக்கை உள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் சிறிலங்கா அரசிற்குரிய இறையாண்மை குறித்து அது நிரம்பவே பேசுகின்றது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில அன்றி மேலாதிக்கத்தில் வட-கிழக்குக் கடற்பிராந்தியத்தில் ஒரு பகுதி உள்ளதென்ற யதார்த்தத்தையும் அது ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றது. இதன் காரணமாகக் கடற்பரப்பில் மோசமான யுத்த நிறுத்த மீறல்களும் அதனால் மேற்கொள்ளப்பட்டதுண்டு.

இது ஒருபுறம் இருக்க, இலங்கைக் கடற்பரப்பிற்கு வெளியில் – அதாவது, 200 மைல்களுக்கு அப்பால் செல்லும் கப்பல்களில் கூடச் சிறிலங்கா கடற்படை ஆதிக்கம் செலுத்த முனைகின்றது. அதுமாத்திரமல்ல புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு மாறான வகையில் சர்வதேச கடற்பரப்பில் வைத்தே விடுதலைப் புலிகளின் கப்பல்களை மூழ்கடிக்கும் முயற்சியில் அது ஈடுபட்டுள்ளது. அது மட்டுமல்ல,கடற்புலிகளின் நடமாட்டங்களைத் தாம் கட்டுப்படுத்துவதாகப் பெருமை பேசுவதும் உண்டு.

இவ்வாறாக, கடற்பிராந்தியத்தில் தனது இறையாண்மை குறித்துப் பேசும் சிறிலங்கா கடற்படையானது, இந்திய மீன்பிடிப் படகுகளைத் தடுத்து நிறுத்தாது இருப்பதானது ஹெமன் குமார கூறியது போன்று பக்கச் சார்பான மனநிலையுடன் கூடிய செயற்பாடாக இல்லாது, வேறு எவ்வாறாக இருக்க முடியும்?

ஏனெனில், சிறிலங்கா கடற்படையினரால் இந்திய மீன்பிடி றோலர்களைத் தடுத்து நிறுத்துதல் என்பது கடினமான காரியமல்ல. இதனை சிறிலங்கா கடற்படை முன்னர் செய்யாததொன்றுமல்ல. அது மட்டுமல்ல, முன்னர் இன்றைய நிலையைவிடச் சிறிலங்கா கடற்படை மிகவும் பலவீனமான நிலையில் இருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய றோலர்கள் எவையுமே சிறிலங்கா ரோந்துப் பீரங்கிப் படகுகளைவிட வேகம் அதிகமானவையல்ல. அத்தோடு, அம்மீன்பிடிப் படகுகளின் அத்துமீறல்கள் கடற்பிராந்தியத்தின் எல்லைப் பகுதிகளிலும் நடைபெறவில்லை. பல பத்து கடல் மைல்கள் இம்மீன்பிடி றோலர்கள் ஊடுருவி உட்பிரவேசிக்கின்றன. அனேக சமயங்களில் இலங்கையின் கரையோரத்தில் இருந்து சில கடல் மைல் தொலைவுவரையில் இவற்றின் ஊடுருவல்கள் உள்ளன.

ஆனால், இவற்றைச் சிறிலங்காக் கடற்படை கண்டும் காணாதுவிட்டுவருகின்றது. அவ்வாறு இல்லாதுவிடில் இத்தகைய தொலைவிற்கு ஊடுருவலைச் செய்வது சாத்தியமானதொன்றல்ல. இதனால், வடபகுதியின் கடல் வளம் பெரிதும் சுரண்டலுக்கு உள்ளாவது ஒரு புறம் இருக்க, வடபகுதி மீனவர்களின் முதலுக்கும் பெரும் சேதம் விளைவிப்பதாக உள்ளது.

இதேவேளை வடபகுதி மீனவர்கள் தொடர்பாக சிறிலங்கா கடைப்பிடிக்கும் அணுகுமுறையோ வேறானது அது, வடபகுதிக் கடலில் வடபகுதி மக்கள் மீன்பிடிப்பதற்குப் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மீன் பிடிக்கும் நேரம், தொலைவு உட்பட மீனவர்களின் அனைத்து நடவடிக்கைகள் மீதும் கடற்படையின் கட்டுப்பாடு உள்ளது. அதனை மீறியதால் பலர் கடும் தண்டனைக்கும் உள்ளாகியுள்ளனர்.

அதாவது, வடபகுதிக் கடற்பரப்பிற்கு உரிமையாளர்களை மீன்பிடிக்க அனுமதிக்க மறுக்கும் கட்டுப்பாடு விதிக்கும் சிறிலங்காக் கடற்படையானது அண்டைநாடு எனினும் அந்நிய நாடொன்று அத்துமீறி மீன்பிடிப்பதற்கு அனுமதித்து வருகின்றது. இந்நிலையானது கடற்படையின் பக்கச்சார்பான நிலையுடன் கூடிய மனோ நிலையைக் காட்டுவதாக இல்லாது வேறு எதனைக் காட்டுவதாகவுள்ளது.

சிறிலங்காக் கடற்படையின் இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பல காரணிகள் இருக்கலாம். இதில் முக்கியமானதில் ஒன்று தமிழீழ மக்களுக்கும் – தமிழக மக்களுக்கும் இடையில் இதன் மூலம் பகையுணர்வை வளர்த்து வருதல் நோக்கமாகலாம். அன்றி இந்திய மீனவர்களின் பாதுகாப்பு என்ற ரீதியில் பாக்குநீரிணைப் பகுதியிலும், வங்காள விரிகுடாப் பகுதியிலும் இந்தியக் கடற்படையின் பிரவேசத்தை அதிகரிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதாக இருக்கலாம். ஆனால், எது நோக்கமாகிலும், சிறிலங்காக் கடற்படை பக்கச் சார்பான மனோ நிலையுடன் செயற்படுகின்றது என்பது மட்டும் நிராகரிக்கப்பட முடியாததொன்று.

# “பொங்கு தமிழை” கொழும்பில் அனுமதித்தால் கடும் செயற்பாடுகளை மேற்கொள்வோம்

## சிஹல உறுமய எச்சரிக்கை

விடுதலைப்புலிகள் கொழும்பில் பொங்குதமிழ் விழாவொன்றினை நடத்த இரகசிய ஏற்பாடுகளைச் செய்துவருவதாக குற்றம் சாட்டியிருக்கும் சிஹல உறுமய, இதனைத் தடுத்து நிறுத்த அரசு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்காதுவிட்டால் கடுமையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிவரும் என எச்சரிக்கை செய்திருக்கிறது.

பொங்குதமிழ் நிகழ்வை கொழும்பில் நடத்த அனுமதியளித்தால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டுமென தெரிவித்து சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ன விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிபபிடப்பட்டுள்ளதாவது, பொங்கு தமிழ் நிகழ்வை கொழும்பில் நடத்தப் புலிகள் இரகசிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இதில் பிரதமரின் செயலாளர் அலுவலகத்தில் ஒருவரும், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி, தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொங்குதமிழ் என்பது புலிகளின் பிரச்சார நிகழ்வாகும்.

பகிரங்கக் கொலைகளை கொழும்பில் புரிந்த ஒரு தரப்பினை அனுமதிக்க முடியாது. புலிகளின் நடவடிக்கைகளினால உயிரிழந்தவர்களின குடும்பங்களின் உறுப்பினர்கள் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இதனையும் மீறி அரசு இதற்கு அனுமதித்தால் விபரீத விளைவுகள் ஏற்டுமென சிஹல உறுமய தலைவர் மேலும் கூறியுள்ளார்.

# ஆட்சி மாற்றத்திற்கு தேர்தல் தேவையில்லை 3 மாதத்திற்குள் புதிய ஆட்சி வரும்

## - நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

புதிய ஆட்சியொன்றை அமைப்பதற்கு இன்றைய நிலையில் தேர்தல் ஒன்று அவசியமில்லை. இன்னும் 03 மாத காலத்தினுள் தானாகவே ஆட்சிமாற்றம் ஏற்பட்டு மக்கள் ஆட்சி உருவாகும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளை வினித்தகமப் பகுதியில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பதுளை தேர்தல் தொகுதி அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வை நடத்துவது குறித்தே மேற்படி கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் நிமால் சிறிபால டி சில்வா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

பொதுசன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்த 93 பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்மிடம் உள்ளனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் 11 பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஈ.பி.டி.பி சார்பு பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு ஆட்சியை அமைத்துக்கொள்ளமுடியும். அப்படி அமைத்துக்கொண்டு 03 மாதங்களின் பின் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தவும் ஆலோசித்து வருகின்றோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு வழங்கிய உறுதிகள் காற்றுடன் சங்கமமாகிவிட்டன. இதை அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஊடகங்களிலும் தெளிவுபடுத்துகின்றார்.

புலிகளின்தலைவர் பிரபாகரனின் உத்தரவிற்கமையவே நாட்டின் செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இராணுவத்திற்குத் தகவல் கொடுக்கும் 159 பேர் இதுவரையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். இது விடயத்தில் அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனவாதக் கட்சி என எவரும் எடைபோட்டு விட வேண்டாம்.

ஆனால் நாடு துண்டாடப்படுவதற்கும் எமது நாட்டின் வளங்கள் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதற்கும் எமது கட்சி எதிரானது ஆகும்.சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று கூறிக்கொண்டு இன்றைய அரசு நாட்டிற்கு பேரழிவை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது.

பதுளையின் அபிவிருத்தி கருதி நான் மேற்கொண்டிருந்த வேலைத் திட்டங்கள் அனைத்தையுமே இன்றைய அரசு நிறுத்திவிட்டது.

வெகுவிரைவில் புதிய ஆட்சியை அமைக்கும் சக்தி எமக்கு கிடைத்துவிடும். அதன் பின்னர் பதுளை மட்டுமல்ல நாடு முழுவதுமே துரித அபிவிருத்தியைக் காணும்.

# சொந்தத் தேவைக்கு ஜீப்பைப் பயன்படுத்திய பொலிஸ் அதிகாரிமீது விசாரணைக்கு உத்தரவு

கம்பஹாவில் பொலிஸ் ஜீப் ஒன்று விபத்துக்குள்ளாகிய சம்பவம் குறித்து பூரண விசாரணைகளை ஆரம்பிக்குமாறு மேல்மாகாண, வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் பத்மசிறி லயனகேக்கு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவிட்டுள்ளதோடு, சொந்தத் தேவையின் நிமித்தம் பொலிஸ் ஜீப்பைப் பயன்படுத்திய இந்தப் பொலிசாரை சேவையிலிருந்து இடை நிறுத்தாதது ஏன் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று மேற்படி பொலிஸ் ஜீப்பில் இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உட்பட 10 பேர் தமது சொந்தத் தேவையொன்றின் நிமித்தம் கம்பஹா நோக்கிச் சென்றிருந்தனர்.

இந்தப் பயணத்தின் போது இவர்கள் கம்பஹாவிலுள்ள விடுதியொன்றில் இரவு உணவை உட்கொண்ட வேளை அந்த விடுதியைச் சேர்ந்த பணியாளர் ஒருவருடன் கைகலப்பு ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக கம்பஹா பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தமையால் அங்கு கம்பஹா பொலிசார் வருவதைக் கண்ட இவர்கள் அவசர அவசரமாக ஜீப்பில் ஏறி விரைவாக ஜீப்பைச் செலுத்திய போதே ஜீப் மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தின் போது கான்ஸ்டபிள் ஒருவர் ஸ்தலத்தில் பலியாகினார். ஏனையோர் படுகாயமுற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹொலண்ட்-இந்தியா இன்று கொக்கி போட்டியில் மோதல்

சம்பியன் கோப்பைக்கான ஹொக்கிப் போட்டிகள் ஹொலண்டில் இன்று தொடங்குகின்றது.

இதில் இந்தியவீரர்கள் சிறப்பாக விளையாடி கோப்பையைக் கைப்பற்றுவார்கள் என்று பயிற்சியாளர் ரஜிந்திரசிங் கூறியுள்ளார்.

முதல் ஆட்டத்தில் இந்தியாவும் ஹொலண்டும் மோதுகின்றன. செய்தியாளர்களிடம் பேசிய பயிற்சியாளர் ரஜிந்திரசிங், இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாடி சம்பியன் கோப்பையைக் கைப்பற்றுவார்கள் என்று கூறியுள்ளார்.

இதன் மூலம் இந்தியா இதுவரை ஒருமுறை கூட சம்பியன் கோப்பையைக் கைப்பற்றவில்லை எனும் குறைதீரும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.




# டென்டுல்கரின் காருக்கு வரிவிலக்கு ஏன்?..........

## டில்லி நீதிமன்றம் கேள்வி

வெளிநாட்டிலிருந்து இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டென்டுல்கர் பரிசாகப் பெற்ற ஆடம்பரக்காருக்கு விதிக்கப்படவேண்டிய ரூபா 1.13 கோடி இறக்குமதி வரியை இந்திய மத்திய அரசு தள்ளுபடி செய்தது. இது குறித்து விளக்கம் கேட்டு டென்டுல்கருக்கு அறிக்கை அனுப்ப டில்லி நீதிமன்றம் கடந்த புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் விளையாட்டுத்துறை ஆகியவற்றுக்கும் அறிக்கை அனுப்ப நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான விசாரணை ஆகஸ்ட் 19 ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மும்பை கிரிக்கெட் சங்கம் மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் மூலம் டென்டுல்கருக்கு அறிக்கை அனுப்ப உத்தரவிட்டுள்ளார் நீதிபதி. எந்த அடிப்படையில் இறக்குமதி வரி தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை தெரிவிக்குமாறு கோரி மத்திய நிதியமைச்சகம் விளையாட்டு அமைச்சகம் ஆகியவற்றுக்கும் அறிக்கை அனுப்ப நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

- குரங்குபாஞ்சான் விவகாரம் -

# படைப் பலம் பிரயோகிப்பின் போருக்குச் செல்ல வேண்டிவரும்!

**- மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன**

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமைப் படை பலம் கொண்டு அகற்றும் உத்தேசம் தமக்கு இல்லை என்று படைக் கட்டளை அதிகாரி லொகான் குணவர்த்தன தெரிவித்துள்ளார். சிறிலங்காப் படைத் தலைமையலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை அவர் வெளியிட்டிருப்பதுடன் போர் நிறுத்தம் அமுலில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். தமது படை பலத்தைப் பிரயோகிப்பதன் மூலம் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் என்றும் அதனால், தாம் மீண்டும் போருக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை தோன்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முப்படைகளையும் சேர்ந்தவர்களின் சம்பளம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 55 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாகவும், இந்தச் சம்பள அதிகரிப்பின் மூலம் படையினரின் மனோநிலை மற்றும் உறுதிப்பாடு மேம்படும் எனவும் லொகான் குணவர்த்தன கூறியுள்ளார். தற்போது படையில் 17000 படையினருக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் இந்த வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய முதற் கட்டமாக 4000 ஆயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# வவுனியாவில் 'உலைக்களம்' நூல் அறிமுகவிழா

(வவுனியா செய்தியாளர்)

வியாசனின் உலைக்களம் நூல் அறிமுகவிழா இன்று (சனிக்கிழமை) வவுனியாவில் நடைபெறவுள்ளது.

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் விடுதலைப்புலிகள் ஏட்டில் வியாசன் என்ற புனைபெயரில் எழுதிவந்த கவிதைகளின் தொகுப்பான "உலைக்களம்" நூல் அறிமுக விழா இன்று (சனிக்கிழமை) மாலை4.00மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10)

# கனடா, அமெரிக்காவில் மக்கள் மின்சாரத் தடையினால் பாதிப்பு

மின்சாரத் தடை காரணமாக அமெரிக்காவிலும் கனடாவிலும் இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று வட அமெரிக்காவின் சரித்திரத்தில் பெரிய மின் தடை ஏற்பட்டுள்ளது.

இந்த மின் தடை காரணமாக வட-கிழக்கு அமெரிக்கா, கனடாவின் ஒன்ராறியா மாவட்டம் மற்றும் நியூயோர்க்கின் சில பகுதிகள் மற்றும் கிலேவேலண்ட், ஒட்டாவா, ரொறன்றோ போன்ற நகரங்கள் இருளில் மூழ்கின. பல லட்சக் கணக்கான மக்களுக்குச் செய்தி எழுதும் வரை மின்சாரம் கிடைக்கவில்லை. விமான நிறுவனங்கள் நூற்றுக்கணக்கான சேவைகளை ஆரம்பித்துள்ளன. அநேக இடங்களில் 90பாகை பரனைட் அளவிலேயே வெப்ப நிலை உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# ஏ-9 வீதியில் நேற்று மூன்று விபத்துக்களில் ஒருவர் படுகாயம் வாகனங்கள் சேதம்

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 யாழ் கண்டி வீதியில் இரு விபத்துக்களில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று பகல் பனிக்கன்குளம் பகுதியில் பயணிகள் பேருந்து ஒன்றும் கை.ஏஸ் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியதில் இரு வாகனங்களும் சேதமடைந் துள்ளன. நேற்று மாலை 6.00 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள் மோதி விபத் துக்குள்ளாகியது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நபர் காயமடைந்ததோடு இவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. இது தொடர்பான விசாரணைகளை, தமிழீழக் காவல் துறையினரின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சம்பவத்தில் வி.நடராஜா (வயது60) 74 இரத்தினபுரம் கிளிநொச்சி என்பவரே காயமடைந்தவராவர்.

அடுத்து நேற்று இரவு 9.30 மணிக்கு ஏ-9 கிளிநகர சந்தியில் உயர்ரக பார ஊர்தி ஒன்றின் சில்லுகளுக்கு இடையில் கார் ஒன்று சிக்கி விபத்துக்குள்ளானதில் பாரிய சேதத்திற்குள்ளானதோடு கார்சாரதி, சிறுகாயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# கிரேக்கக் கடலில் விபத்தில் சிக்கிய படகிலிருந்து இலங்கையர் மீட்பு

கிரேக்கக்கடலில் விபத்தில் சிக்கிய இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

கிரேக்கத்துக்குள் சட்ட விரோதமாக நுழைவதற்காக 40 பேருடன் சென்று கொண்டிருந்த படகொன்று கடந்த புதன்கிழமை இரவு கிரேக்க கடலில்மூழ்கியதில் ஐந்து பேர் உயிரிழந்தனர். இலங்கையர்கள் உட்பட 32பேர் கிரேக்க கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

பத்துப்பேர் பயணிக்கக்கூடிய படகில் நாற்பது பேர் பயணித்தமையாலேயே இந்தப்படகு கடலில் மூழ்கியதாகதெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களில் மூன்று குழந்தைகள் உட்படநால்வர் ஈராக்கியர்கள் எனவும் மற்றவர் எதியோப்பிய பெண் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மூழ்கிய படகில் இலங்கையரைத் தவிர, சூடான் சோமாலிய, ஈரான் ஆகியநாட்டவர்களும் அடங்குவதாகவும் சம்பவத்தில் காணாமல் போன மூவரை தேடி ஏழு கடற்படைப்படகுகளும் ஒரு உலங்கு வானூர்தியும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இரகசியப்பொலிசார் விசாரணை

உப்புவெளி செல்வநாயகபுரத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் இரகசியப்பொலிஸ் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். இக்குழு உப்புவெளிக்குச் சென்றுள்ளதாகவும் 4நாட்களுக்குள் இது தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# கட்டுத் துவக்கைப் பரீட்சித்த சிறுவன் ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

பாண்டியன்குளம் பிரதேசத்தில் ஏற்பட்ட கட்டுத்துவக்கு வெடி விபத்தில் சிறுவன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் வீட்டிலிருந்த துப்பாக்கியை எடுத்துப் பரிசித்துப் பார்த்த வேளை துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் காயமடைந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் சோமசுந்தரம் தியாகுலன் (வயது-12 177 பாண்டியன்குளம்) என்ற சிறுவனே இவ்வாறு காயமடைந்துள்ளார். (பா)

# கிளி.வைத்தியசாலையில் பெண்கள் சிகிச்சைக் களம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பெண்கள் சிகிச்சைக் களம் (விடுதி) அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி பெண்கள் சிகிச்சைக் களம் அமைப்பதற்கான நடவடிக்கையினைப் போருட் நிறுவனம் மெற்கொள்ளவுள்ளது.

இதுவரை காலமும் பெண்கள் சிகிச்சைக் களம் அமைப்பதற்கு இடவசதி இன்மையால் மேற்படி பணிகள் இடம்பெற முடியாத நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பொதுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டபல்கலைக் கழக புகுமுகமாணவர் ஒன்றியத்தில் விசேட பொதுக் கூட்டம் ஒன்று நடை பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளி.மாவட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் அண்மையில் வெளியாகிய க.பொ.த. உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானவர்களையும் பதிவு செய்து கொள்ளுமாறு புகுமுக மாணவர் ஒன்றிய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (பா)

# தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிலைய மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிலைய மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு சமுதாய முன்னேற்ற நிலையத்தின் ஜெயந்தி நகரில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் மண்டபத்தில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கணினி ஓர் அறிமுகம்,உரைச்சித்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (பா)

## விடுதலைப்...

தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்யும் போதெல்லாம் சாக்குப் போக்குக் கூறிவரும் கண்காணிப்புக் குழு சில வேளைகளில் கடற்படையினருடனான சந்திப்புக்களை ஏற்பாடு செய்கிறது. இவ்வாறான சந்திப்புக்களில் கண்காணிப்புக் குழு முன்னிலையில் எடுக்கப்படும் எத்தகைய தீர்மானங்களும் நடைமுறைப்படுத்தப்படாது வெட்டிப் பேச்சாகவே இருக்கின்றது. இது குறித்துக் கண்காணிப்புக் குழுவும் அசண்டையாகவே இருக்கின்றது. எனவே இனிமேலும் இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகளுக்கு நாம் உடன்பட்டுப் போகாது எமது உரிமைகளைக் கட்டிக் காத்து எமக்காகப் போராடும் பலம் பொருந்தியவர்களாக இருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளை இவ்வாறான கலந்துரையாடல்களில் பங்கு கொள்ளச் செய்து அதன் மூலம் எமது உரிமைகளைப் பெற்றுக கொள்ளப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (33)

## இந்திய...

தெரிவிக்கின்றார் இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கை வருவதற்கான புதிய திகதி ஒன்றை நிர்ணயிப்பது பற்றி இந்திய உயர் ஸ்தானிகர் மூலம் வெளியுறவு அமைச்சர் டிரோன் பெனாண்டோ முயற்சி மேற்கொள்வதாகவும் தெரியவருகின்றது.

## சிறிலங்கா...

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைத் தலைவர் தியாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின்போது யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில நிலவும் மனித உரிமைகள் தொடர்பாகக் கேட்டறிந்த ஜில்பேணாட் கருத்துக் கூறுகையில், ஒரு சமூகத்தில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் ஒவ்வொருவரும் மற்றவர்களின் வாழ்வுரிமையை மதித்து வாழப்பழகுவது அவசியம். இதனால் தான் சமாதானம் என்பது சுமுக நிலையை அடையும். ஆனால், ஏற்றத்தாழ்வு மிக்கதாய் நகரும் இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் சுமுகமாவதற்கு சகல தரப்பினரினதும் உரிமைகளை மதித்து நடக்க வேண்டியது அரசினது கடமையாகும் என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தற்பொழுது இங்கு நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாகவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் எமது உரிமைகளை பாதுகாக்கக் கூடியதாகக், கூறப்பட்டுள்ள விடயங்கள் எதுவும் இதுவரையும் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை. இதனால், தொடர்ந்தும் உயர் பாதுகாப்புவலயம் சோதனைக் கெடுபிடிகள் போன்றவற்றால் இராணுவத்தால் எமது அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் அபிவிருத்தி என்பது தமிழ் மக்களால் எட்ட முடியாத ஒன்றாகவும் இருக்கின்றது. இதனால் தமிழ் மக்கள் மத்தியில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் வகையில் இலங்கை அரசு மீது சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். (33,27)

## புதிய..

சேர்ந்த விவசாயிகள் செய்த தொடர்ச்சியான போராட்டங்கள் காரணமாக சாவகச்சேரி, தனங்களப்பு வீதியின் மேற்குப் புறமாகவும், நாவற்குழியின் வடக்காகவும் புகையிரதப் பாதையின் தெற்காகவுமுள்ள 1000 ஏக்கர் வயல் நிலத்தை நெற்பயிற்செய்கைக்காக அண்மையில் படைத்தரப்பு விடுவித்திருந்தது. பெரும் போக மழை தற்போது ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே குறித்த வயல் பிரதேசத்துக்குள் நுழைவோர் புதிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனப் பணித்துள்ளது.

தமது புகைப்படங்கள் மற்றும் கிராம அலுவலர்களின் சிபார்சு என்பவற்றுடன் கைதடி பெரும்பாக அலுவலகம் ஊடாக இவ்வடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் படையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். இதற்காக எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பு பெற வேண்டும் என்று இராணுவத்தினர் கேட்டுள்ளனர்.

## சமாதானப்...

இலங்கையின் சமாதான பேச்சு வார்த்தைகளை எமது நாட்டில் நடத்த முடிந்தமையை எண்ணி தாய்லாந்து பெருமை கொள்கிறது. தேவை ஏற்படும் பட்சத்தில் எதிர் காலத்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை எமது நாட்டில் நடத்தினால் மகிழ்ச்சிகொள்வோம் என அவர் மேலும் கூறியுள்ளார். போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்ப உதவிசெய்வதற்கு சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு தமது நாடு தயாராக இருக்கின்றது எனவும்அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இன்றும் பல்வேறு துறைகளுக்கு உதவி செய்யமுடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## குறிப்பிட்ட...

நிலையில், தமது ஜெனிவாவில் உள்ள தலைமையகத்தின் பணிப்பின் பேரில் தாம் மீனவர்களைச் சந்திக்க வருகை தந்திருப்பதாக செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் முன்னர் பருத்தித்துறையில் அமைந்திருந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை அலுவலகத்தை மூடியதால் மீனவர்கள் தமது சிரமங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள் மீதான படையினரின் கெடுபிடிகள் தொடர்பாக பல தரப்புக்களிடமும் தாங்கள் முறைப்பாடுகளைச் செய்திருக்கின்றபோதும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வலிகாமத்தின் பல கரையோரக் கிராமத்துக்குத் தாங்கள் அண்மையில் விஜயம் செய்துள்ளதாகவும் அப்பகுதி மீனவர்களிடம் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தெரி வித்துள்ளனர்.

இந்த நிலையில் வடமராட்சி வடக்கு மீனவர்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காக 524ஆவது படைப் பிரிவின் பருத்தித்துறை முகாமிற்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வருகை தருமாறு படைத்தரப்பு மீண்டும் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அண்மையில் இவ்வாறான சந்திப்பொன்று இடம் பெற்றுப் பல உறுதி மொழிகள் படையினரால் வழங்கப்பட்டுள்ள போதும் இதுவரை நிறைவேற்றப்படாது இருப்பது குறிப்பிடத்தக்கது. (27)

## யாழ்...

சிறைச்சாலையின் நிர்வாகங்களைப் பார்வையிட வரும் தொண்டு நிறுவனங்களிடம் இங்கே எதுவும் பிரச்சினையில்லை எனக் கூறி அவர்களை அனுப்பிய பின்பு அவர்களது வரவை ஏளனம் செய்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அத்தியட்சகரையும் பாதிக்கப்பட்ட முறைப்பாட்டுக்காரரையும் எதிர் வரும் 24 ஆம் திகதி விசாரணைக்கு வருமாறும் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ அறிக்கைகளைக் கொண்டுவருமாறும் பணித்துள்ளனர்.